பக்கங்கள் 12 விலை சதம் 20

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதா வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 27-5-62 | ஞாயிறு | இதழ் 50




**'கனவே, நீ வாழி!'**

நனவினுல் நல்காதவரைக் கனவினுல்
காண்டலின் உண்டென் உயிர். (குறள்)

[ நனவிலே வந்து என்னிடம் உறவாடாத காதலரை
கனவிலே காண்பதால் என் உயிர் வாழ்கிறது! ]

'புதினம்' கருத்து:

# சுந்தரரிடமிருந்து ஒரு சீறல்!

நீண்ட பல நாட்களுக்குப் பிறகு வவனியாச் சிங்கம் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்திருக்கிறது!

'வவனியாச் சிங்கம்' என்ற பெயரே இவரை விட்டுப் போய்விடும் போலிருந்தது—இந்தச் சமயத்தில்தான் 'இதோ இருக்கிறேன்' என்ற கர்ச்சனை கேட்கிறது!

சரியான சமயந்தான்!

மற்றவர்களைப்போல, தமிழரசார் எதைச் செய்தாலும் அதற்குக் குற்றம் சொல்லிக் கொண்டிராமல், அவர்களுடைய பிரயத்தனங்களுக்காக ஒரு நீண்டகாலத்தை அவர்களுக்காகவே கொடுத்து விட்டு—அதுவரை மௌனமாக இருந்துவிட்டு—இப்போது சத்தம் போடத் தொடங்கியிருக்கிறார் சுந்தரலிங்கம்:

'தமிழரசார் தாம் சென்ற பாதையில் வெற்றி பெறவில்லை; நட்டமே கண்டார்கள்;—மீண்டும் அதே பாதையில் செல்லத் துணிகிறார்கள்' என்று அவர் கருதுவதால் இப்போது தமது குரலை எழுப்புகிறார் சுந்தரலிங்கம்.

நேர்மையான மனிதர்!-தீர்க்கமான அறிஞர்! பொறுப்புள்ள தலைவர்!

இப்போது அவர் விடுத்திருக்கும் அறிக்கையில்—

தமிழரசாரின் கொள்கைகளைப் பிய்த்துப் பிடுங்கியிருக்கிறார்!

அவர்களுடைய சத்தியாக்கிரக இயக்கத்தினால் ஏற்பட்ட நட்டங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்!

'சமஷ்டி என்பது வீண்கனவு' என்று நியாயவாதம் செய்யும் அதேவேளையில் "சாம்ராச்சிய நாடுகளில்அங்கம் வகிக்கும் ஒரு தனித்தமிழ் நாடுதான் எமக்குத் தேவை!" என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்!

நல்லது!

மிகவும் நல்ல இலட்சியம்.

தமிழரசார் கூட 'சமஷ்டி கிடைக்காவிட்டால், தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கையே அடுத்தது!' என்று நினைத்தார்களென்று தோன்றுகிறது. கட்சிரீதியில் அப்படி ஒருதீர்மானம் இல்லாவிட்டாலும்,—எல்லாரும் அப்படி நினைக்காவிட்டாலும்—அவர்களுள் சில தலைவர்களாவது அப்படிக் கருதினார்களென்று நம்பக்கூடியதாயிருக்கிறது.

இந்த நல்ல சிறந்த லட்சியத்தை அடைவதற்கு சுந்தரலிங்கத்தார் என்ன வழி சொல்லியிருக்கிறாரென்றால்—

அவருடைய அறிக்கையில் ஒன்றுமே சொல்லவில்லை!

சத்தியாக் கிரகப் போராட்டத்தில் சுந்தரலிங்கத்தாருக்கு நம்பிக்கையில்லை. நம்பிக்கையில்லாதது மட்டுமல்ல; அது ஒரு 'மாயா ஜாலக் கூத்து' என்று கருதுகிறார் அவர்!

சத்தியாக் கிரகத்தை விட்டால்—
வேறு வழிகள் இருக்கும்!
அவைகளை இப்போது சொல்லக் கூடாதென்று அவர் விட்டிருப்பார்!

ஆனால்—

அப்படியான வேறு ஒருவழிக்கு இப்போது தமிழ்பேசும் மக்கள் தயார் தானா? அதற்கு வேண்டிய வசதிகளும் சூழ்நிலையும் இருக்கிறதா?

சும்மா இருப்பதைவிட — 'அடங்காத்' தமிழர்கள் அடங்கிவிட்டார்கள் என்று அரசாங்கம் நினைத்துத் தலைமீது காலைவைக்கத் துணியாமலிருப்பதற்காக வேனும்—ஒருபோராட்டம், ஒரு கிளர்ச்சி அவசியமல்லவா?

அந்தப் போராட்டம், அந்தக்கிளர்ச்சி —

சத்தியாக்கிரக முறையில் மட்டுந்தான் இப்போது அமைய முடியும்!

இதைத் தமிழரசார் செய்யட்டும், மற்றவர்கள் போற்ற முடியாவிட்டால் போகட்டும்; தூற்றாமலாவது இருப்பது நல்லது!

'தனித்தமிழ்நாடு' பெறுவதற்கு சுந்தரலிங்கத்தார் ஏதாவது ஒரு திட்டத்தை தீட்டி, அதற்கான வழி வகைகளை கோலுவாரானால்—

தமிழரசாரே, நீங்கள் அவருடைய முயற்சியை முறியடிக்க மேடை அமைக்க மாட்டீர்களல்லவா!

* * *

இத்தலையங்கம் அச்சுக்குப் போகும் சமயத்தில் மூதூர்த் தொகுதியில் திரு. சுந்தரலிங்கம் போட்டியிடுகிறார் என்ற பத்திரிகைச் செய்தி வெளியாகியுள்ளது.

தமிழரசாரும் சுந்தரலிங்கத்தாரும் எதிர் மேடையமைத்துப் போராடும் நிலைமை உருவாகியிருக்கிறது!

வருந்தத்தக்க நிகழ்ச்சி!
மிக. மிக மிக வருந்தத்தக்க நிகழ்ச்சி!

இதற்கு —
ஒரு மாற்றம் வராதோ!

# 'பூதந்தேவனர்' அரங்கு

## அறிவா? பொருளா?

வேலணையில் நடைபெற்ற பத்தாவது திருக்குறள் மகாநாட்டில் மிகமிகத் திருப்திகரமாக நடைபெற்ற ஒரு அம்சம் கருத்தரங்கமாகும். இது கொழும்பில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளரால் கூட்டப்பட்ட தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் நடந்த கருத்தரங்கம் போலல்லாமல் வேறு விதமாய் அமைந்தது. எழுத்தாளர் சங்க மகாநாட்டுக் கருத்தரங்கத்திலே பலரும் தத்தம் கொள்கைகளை வெறுமனே ஒப்புவித்தார்கள், சிலர் என்ன கொள்கைகளைப் பற்றிப் பேசுகிருர்களென்பதே விளங்கவில்லை. திருக்குறள் மகாநாட்டில் அது கருத்தரங்கமாய் இராமல் தர்க்க அரங்கமாய் மிளிர்ந்தது. வள்ளுவன் வழியில் வாழ்வை நடத்த அறிவா? பொருளா? எது சிறந்தது என்பதைப் பற்றிப் பன்னிரண்டு பேர் தர்க்கித்தார்கள். பேராசிரியர் ஐயன் பெருமான் கோனுர் தலைமையில் அறுவரும், வித்துவான் சோதிநாதன் தலைமையில் அறுவரும் எதிரெதிரே ஆசனங்களில் கம்பீரமாக வீற்றிருந்து ஒவ்வொரு பக்க நியாயங்களையும் கூறினர். அடுத்தவர் தகர்த்தெறிந்தார். தொடக்கத்திலேயே கருத்தரங்கம் களைகட்டி, நடுப்பகுதியில் சூடு பிறந்து, முடிவில் உச்சநிலைக்கே போய்விட்டது. ஆட்களை ஆட்கள் அநாகரிகமாகத் தாக்காமல் திருக்குறளிலும், உரையிலும் பிறநூல்களிலும் கதைகளிலும் உதாரணம் தந்து, விஷயத்தைப் பூரண ஆயத்தத்தோடு பொறுப்புணர்ந்து செய்தமை போற்றற்குரியது. இவ்வளவுக்கும் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் ஆழ்ந்து, அகன்ற, நுண்ணறிவுப் பண்டிதர்களோ வித்துவான்களோ அல்லர். வராத ஒருவருடைய இடத்தை நிரப்ப வந்த புதுமைலோலன் முன் ஆயத்தமெதுவுமின்றி அருமையாகத் தர்க்கித்தார். 'அரசியல் மேடை பல கண்டவராயிற்றே, அரசியலுக்குள் இழுத்து விடுவாரோ' என்று பயந்துகொண்டிருந்தேன். அந்தப் பக்கமே தொட்டுக்கூடப் பாராமல் மிகமிகக் கண்ணியமாய் எடுத்த விஷயத்தோடு தொடர்ந்து போய் தன் கட்சியை அழகாகப் பேசி முடித்தார். பிரபல எழுத்தாளர்களாகிய தேவன், க. பே. முத்தையா, சனக. செந்திநாதன், மூ. கணபதிப்பிள்ளை என்போர் தங்கள் எழுத்துப் புகழைப் பேச்சிலும் நிலைநாட்டிக் கொண்டனர். தலைமை வகித்த செந்தமிழ்ச் செல்வர் முதலியார் சின்னத்தம்பி அவர்கள் பேச்சாளர்களை அறிமுகஞ் செய்வதிலும், நேரத்துக்குள் முடிப்பதிலும் வெகு திறமையாக நடந்துகொண்டமை போற்றக்குரியது. ஆனல் இப்படியான தர்க்க விஷயங்களுக்குப் பொழிப்புரை—திரட்டு—கூறுவதோடு நிறுத்திக் கொள்வதுதான் நல்லது என்பது என் அபிப்பிராயம். அந்தப் பக்கம் வென்றது இந்தப் பக்கம் தோற்றது என்று கூறுவது அவ்வளவு நல்லதல்ல. இலங்கை வானெலி நிலையத்தார் சுடச் சுட ஞாயிற்றுக்கிழமை இரவே முதல் நாள் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினுர்கள். அவர்கள் கூட சொற்பொழிவாளர்க்குக் கொடுத்த இடத்திலும் பார்க்க இந்தக் கருத்தரங்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள். அரைமணித்தியாலத்துள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து விஷயங்களை ஒலி பரப்பியது அருமையாக அமைந்திருந்தது.

## 'டன், டினுன்'

இந்தக் கருத்தரங்கத்திலே இன்னெரு விசேடம் கணவனும் மனைவியும்-எதிரெதிரே உட்கார்ந்து விவாத முடிவில் பேசியதுதான். திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் அறிவுப் பகுதிக்கும், பேராசியர் சாலை. இளந்திரையன் பொருள் பகுதிக்கும் முடிவுரைகூற நேர்ந்தது. இது ரசிகர்களுக்குப் பேரானந்தமாய் அமைந்தது. அறிவுப் பகுதியை முடித்துவைத்த பேராசிரியை ஒரு கதையோடுதான் ஆரம்பித்தார். கதை ரசமாக இருந்தது. 'சைவ மடாலயம் ஒன்றில் ஏராளமானபொருள் இருந்தது. மடத்தின் தலைவர் அறிவாளி. ஆனல் அவர் வைத்திருந்த வேலையாள் முழு மூடன். மடத்தின் சம்பிரதாயப்படி உயர்ந்தவர்களுக்குத் 'திரு' சேர்த்துச் சொல்ல வேண்டும். ஆனல் அம் மூடனுக்கு யாருக்குத் 'திரு' சேர்ப்பது யாருக்குவிடுவது என்று தெரியாது. ஒரு நாள் அவன் மூச்சுத் திணற ஓடிவந்து "திருப்பூனையார் திருஉறியில் தாவி, திருப்பாலைக் குடித்து விட்டார்" என்று கத்தினுன், தலைவர் சிரித்து விட்டு அவனுக்கு "இனிமேல் 'திரு' சேர்க்கவேண்டாம்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அன்றிரவு நடுச்சாமத்தில் அவன் திரும்பவும் ஓடிவந்து 'டன், டினுன்' என்று கத்தினுன், தலைவருக்கு இந்த 'டன் டினுன்' விளங்கவேயில்லை, கடைசியாக வற்புறுத்திக் கேட்டபோதுதான் 'திருடன் திருடினுன்!' என்று அவன் முடிச்சை அவிழ்த்தான்! மூடனை வேலைக்கு வைத்திருந்தபடியால் பொருளும் போய் அவஸ்தையும் பட நேர்ந்தது அத்தலைவருக்கு- என்று முடித்தார் அம்மையார். கரகோஷம் வானைப் பிளந்தது. இதுவுமல்லாமல் அவர் கூறிய ஆகாயக் கப்பல் நியாயமும் தாயின் பசி நீக்கும் குறளும் தர்க்க ரீதியோடு அமைந்திருந்தன.

## நல்ல கவியரங்கம்.

அம்மகாநாட்டில் நடந்த கவியரங்கிலே எட்டுக் கவிஞர்கள் திருக்குறளைப் பலகோணத்தில் பாடினுர்கள். கவிஞர் செல்லையா நல்ல கவிஞர்தான். ஆனல் தன் பாடலுக்குத் தானே வியாக்கியானஞ் செய்யத்தொடங்கவே தலைவர் குறுக்கிட்டு விட்டார். எனவே அவரது உற்சாகம் குறைந்துவிட்டது. யாழ்ப்பாணன் கவிதைகள் ஒரே போக்கில் தொகையாக அமைந்து விட்டது. குறைத்திருக்கலாம். சாலை இளந்திரையன் தனது கவிதைகளை இசைப் புலமையோடு வாசித்தார். விருத்தங்களுக்குப் பின்னுல் வெண்பாவும் பின் சில்லறைகளும் வந்தமை எடுப்பாக இல்லை. 'அம்பி'யின் கவிதைகள் சிறப்பாக அமைந்திருந்தன: ஆனல் நீளம் கூடிவிட்டது. இடையில் 'தொய்ந்த' பகுதிகளை விட்டிருக்கலாம். தில்லைச்சிவன் உசார வாசிக்கவேண்டும். கவிஞர்க்குரிய தெம்பு போதாது. முருகையன் கவிதைகள் வழமைபோல் நன்ருகவிருந்தன. ஆனல் சுருக்கி விட்டார். மகாகவியின் கவிதைகள் அவரே வாசித்ததால் வசனம்போல் அமைந்துவிட்டது. அ. ந. கந்தசாமி திருவள்ளுவரை முற்போக்குக் கோணத்தில் பார்த்தார். கற்பனை நயமும் சொல்லழகும்போதாமை தொனித்தது. மொத்தத்தில் கவிதைக்குரிய ஆழம் சிறிது காலமாக இல்லாமல் இருப்பது கவியரங்கத்திலும் தென்பட்டாலும் ஈழத்துக் கவிஞர்கள் முன்னேற்றம் பெருமைப்படகூடியதே!

## உருவமைப்போம் வாருங்கள்

தலைமைவகித்தநாவற்குழியூர் நடராஜன், தான்சிறந்தகவிஞர் தான்என்பதை கவிஞர்களை அறிமுகப் படுத்தும்போதும்முடிவுரை கூறும்போதும் நிரூபித்

[11-ம் பக்கம் பார்க்க]

---

தமிழ் மறைக்கழகம் வேலணையில் நடாத்திய 10-வது திருக்குறள் மாநாட்டின் கவியரங்கிலே

விருந்துக் கவிஞர் — சாலைஇளந்திரையன்:

# இன்பநூல்—திருக்குறள்

சந்தனத்து மென்தமிழில் சாலை இளந்திரையன்
சுந்தரப்பண் பாட்டிசைக்கத்தோன்றுக-முந்துதமிழ்
பாடிப் பெருக்கிப் பலகால் வளர்ந்துவந்தும்
வாடி வதங்கா தவர்.

(வேறு)

வேலணை வாழ்தமிழ் வித்தகரே — குறள்
மேன்மை பரப்பிடும் பண்பினரே,
நூலறி வாளர்பன் னூற்றுவராய்—வந்து
தூய்கவி கேட்கும் தமிழர்களே.—

பாட்டரங் கேறிய பாவலரோடு—ஒரு
பாவல னுயெனை ஏற்றிவைத்தே
கேட்டிடு வோம்,கவி தாருமென்றே-எனைக்
கேட்க விரும்பித் திரண்டவரே!

நாடு கடந்து நலங்கள் கொணர்ந்திங்கு
நாட்டிய உங்கள் பெருமைஎல்லாம்
வாடுத லின்றி வளருக என்றுமை
வாழ்த்தி வணங்கித் தொடங்குகிறேன்,

(வேறு)

இன்பத்தைச் சொல்வதிலே — அதிலே
ஈடிணை வெல்வதிலே
என்தந்தை 'வள்ளுவம்'போல்—ஒருநூல்
இன்னும் பிறக்கவில்லை!

இன்பம் எனப்படுதல்—அறத்தில்
ஏறிநின் றீட்டுவதே!
என்னும் மனிதநெறி—குறளார்
ஏற்றிய தீபஒளி!

அன்பியும் அன்பனுமாய்—இருநெஞ்
சார்ந்து பிணைந்துவிட்டால்
இன்பமலா திலையாம்,—அதுவே
இல்லறம் என்பதுவாம்!

காமத்துப் பாலினிலே—இருவர்,
கண்ணின் மொழியறிவால்
ஊமைக ளாகுமதைக்—குறளார்
ஓவிய மாக்கிவிட்டார்!

தோற்றவர் வென்றவராம்,—அதிலே
தோன்றுதல் இன்பமதாம்!
ஏற்றிய இன்பநெறி—இதுபோல்
எங்கணுங் கண்டதுண்டோ?

(வேறு)

மங்கை இருநோக்குள் ஒன்றுவந்து நோய்செய்ய
மற்ருேர் திருநோக்கே மாமருந்தாய் ஓடிவரும்
பொங்கு சுவையை,புதுச்சுவையை,வள்ளுவனுர்
போற்றி உரைத்தார்; பிறரெல்லாம் 'ஆம்'-
[என்ருர்.

தொட்டுவிட்டால் சுட்டுவிடும் தீயை அறிந்
[தார்க்கு
விட்டு விட்டால் சுட்டுவிடும் காதலெனும்
[விந்தையினைக்
தொட்டு விளக்கித் துலக்கி அளித்தவர்நம்
மட்டுமிதம் இல்லாத மாண்புகழின் வள்ளுவரே

கள்ளைக் குடிப்போரே,—கள்ளில் பெருமகிழ்வு
காணும் மனிதரே, கள்ளினைத் தள்ளுவீர்!
உள்ளுதோ றின்பம் உவந்தியும் காதல் போல்
கள்ளுண்டோ என்றிசைத்தார்; தள்ளுண்டார்
[மற்றவர்கள்

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்துக் குண்டென்று-
[கண்டவர்கள்
தள்ளுவரோ காதலினை? தாங்குவரோ போதை
யினை?
'தந்தையார்' இன்பநூல்நல்கும் சிறப்பிதுகாண்

(வேறு)

வள்ளுவப் பாட்டின் வழியினிலே—தமிழ்
வாழ்வு படைக்கின்ற இல்லறத்திர்
அள்ளி உரைக்கும் அளவினதோ—அவன்
ஆக்கி அளித்துள்ள இன்பநெறி!

உள்ளமும் உள்ளமும் ஒன்றிடுமாம்-அதில்
ஊடல்உவகை குமிழிடுமாம்!
தள்ளவும் தள்ளவும் ஒட்டிடுமாம்,—அது
தான்உயர் காதலின் அற்புதமாம்!

அன்பை எழுதி அடுக்கிவைத்தான்,-அறம்
ஆக்கமும் அப்படி யேவரைந்தான்,—
இன்பம் எழுதப் புகுகையிலோ,—எழுத்
தாணியைத் தேனிலே தோய்த்துவிட்டான்!

நாமனை வோரும் உயர்ந்திடவே-தமிழ்த்
தந்தை உரைத்தமுப் பாலினிலே
காமத்துப் பால்மிகச் சின்னதுதான்-எனில்
கட்டிக் கரும்பின் பெருக்கதுதான்!

பூமுகைக் குள்ளுள்ள வாசனைபோல் - ஒரு
புன்னகைக் குள்ளொரு செய்தியுண்டாம்
நாமறியப் பிறர் இக்கருத்தை—இந்த
நன்னயத் தோடு நவின்றதுண்டோ?

ஊடலுவகை புலவிநுணுக்கமென்
றுற்ற இறுதிக் கணுக்களிலே
பாடல் அமுதம் பெருக்கெடுத்தே-மனப்
பாத்திகள் தோறும்' நிரம்புதம்மா!

இன்னமும் பாடிக்கொண்டேயிருப்பேன்-'குறள்
இன்பநூல், இன்பநூல்' என்றெடுத்தே!
இன்னமும் பாடப் பலருளராம்—அதற்
காக முடிப்பம், வணக்கமையர்!

# ஸ்ரீமாவோ அம்மையாரின் சோசலிசம்!

# உறவினருக்கே உத்தியோகங்கள்!

'வரிக்கு மேல் வரியாக வருகிறதே!' என்று திகைக்கிறீர்கள்! இந்த வரிப்பணமெல்லாம் எங்கெங்கே எப்படி எப்படிப் போகிறதென்று உங்களுக்குத் தெரியுமா? அரசாங்கம் ஏதேதோ 'திட்டங்கள்' என்று போடுவதும் அவற்றின் பெயரால் லட்சம் லட்சமாகப் வரிப்பணம் போய்க் கொண்டிருப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் அதைவிட இப்படியும் கொஞ்சம் போகிறது!

சோசலிஷத்தைப் பற்றிக் கதையளப்பதில் நமது அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களுக்கு நிகரானவர்கள் யாரும் இல்லையென்பது உண்மைதான்! அவர்கள் ஒவ்வொருவரும் 'சமதர்மம்' பற்றிப் பிரசங்கங்கள் செய்வதில் வல்லவர்கள். ஆனால் நடைமுறையிலோ—

மிக அருவருக்கத்தக்க முறையில் நமது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

காலியாகி வருகின்ற பெரியபதவிகளிலெல்லாம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் உறவினர்களே அமர்த்தப்படுகின்றார்கள்.

பொது மக்களின் வரிப்பணத்தின் பெரும்பகுதியை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினது குடும்பமும் அவரது உறவினர்களுமே சம்பளமாக 'சேகரித்து' வருகின்றனர்.

இதோ விபரம்—

- பிரதம மந்திரி — ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா— ஆண்டொன்றுக்குச் சம்பளம் ரூபா 18,000.

- பிரதமரின் அந்தரங்கக் காரியதரிசி—மக்கி ரத்வத்தை (பிரதமரின் சகோதரன்)— ஆண்டொன்றுக்கு சம்பளம் ரூபா 10,707.

- கவர்னர் ஜெனரல்— வில்லியம் கோபல்லவா (பிரதமரின் சகோதரரான மக்கி ரத்வத்தை மகளைத்தான் திருமணம் செய்திருக்கிறார்) —ஆண்டொன்றுக்குச் சம்பளம் ரூபா 1,08,000

- அரசாங்க சேவைக் கமிஷன் தலைவர்— ஹெட்டர் கொப்பேகடுவ (பிரதமரது ஒன்றுவிட்ட சகோதரர்) ஆண்டொன்றுக்குச் சம்பளம் ரூபா 36,000.

- கவர்னர் ஜெனரலின் அந்தரங்கக் காரியதரிசி— திருமதி ஐ: ரத்வத்தை (பிரதமரின் மைத்துனி, கவர்னர் ஜெனரலின் மகள்)

- இ. போ. சபை அங்கத்தவர்—சேனா ரத்வத்தை— பிரதமரின் ஒன்று விட்ட சகோதரர்.

- செனட்சபைத் துணைத் தலைவர் பி. எச். தனுவில்லை— (பிரதமரின் மாமனார்)—ஆண்டொன்றுக்குச் சம்பளம் ரூபா 12,000.

- பதில் கொமாண்டர் Volunteer Force—ஸ்டான்லி ரத்வத்தை (பிரதமரது ஒன்றுவிட்ட சகோதரர்)

- சுகாதார அமைச்சரது பாரளுமன்றக் காரியதரிசி —ஜே. பி. ஒபயசேகரா (பிரதமரின் ஒன்றுவீட்ட சகோதரர்) — ஆண்டொன்றுக்குச் சம்பளம்: ரூபா 12,000.

- நிதி மந்திரியும், பிரதமரது பாராளுமன்றக் காரியதரிசியும்—பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா (பிரதமரின் மருமகன்)— ஆண்டொன்றுக்குச் சம்பளம்: பாராளுமன்றக்காரியதரிசி என்ற முறையில் ரூபா 12,000. நிதி மந்திரி என்ற முறையில்: ரூபா 18,000.

- நிதி மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி — திருமதி லட்சுமி டயஸ் பண்டாரநாயகா (பீலிக்ஸ் டயஸின் மனைவி) —ஆண்டொன்றுக்குச் சம்பளம்: ரூபா 5,160.

எப்படியிருக்கிறது, எங்கள் நாட்டு 'மாமி — மருமகன் ஆட்சியில் சோசலிசம்!

## படித்தது ஒன்று பரீட்சையில் மற்றொன்று

பாடத்திட்டத்துக்குப் புறம்பான கேள்விகள், 'கொமேஸ் டிப்பிளோமா' பரீட்சைக்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்றும் படிப்பிக்கப்பட்டவற்றில் ஒரு கேள்வியுமே கேட்கப்படவில்லையென்றும் நுண்கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கல்விமந்திரிக்குச் சமர்ப்பித்திருக்கும் ஒரு மகஜரில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தாங்கள் சமர்ப்பித்த மகஜரை அமைச்சர் ஒரு அதிகாரிக்கு நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளாரென்றும், ஆனால் இதுவரைகாலமும் தமது குறையை நிவர்த்திக்க அந்த அதிகாரி எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும், மாணவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

## திரைமறைவில்

### "கட்டிடம் தேவை, காலியாக்கு?"

யாழ்ப்பாண நகரில் மக்கள் வங்கியின் கிளை ஒன்றை நிறுவுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான். அந்த வங்கியின் கிளையை நிறுவுவதற்குத் தோதான கட்டிடத்தை இப்போது தேடித்திரிகிறார்களாம்! யாழ் நகரின் மத்தியில் புத்தம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒரு பிரபல வர்த்தகரின் பெரிய கட்டிடமொன்று அவர்களின் கண்ணை உறுத்துகிறதாம். மக்கள் வங்கியின் தேவைக்காக உடனடியாக அக்கடடத்தைக் காலியாக்கிக் கொடு" என்று குறித்த முதலாளியை அரசாங்கம் கேட்கக் கூடுமென்று ஒரு கதை அடிபடுகிறது!—கம்யூனிச ஆட்சி கிட்டத்தட்ட வந்து விட்டது.

### சுந்தரலிங்கத்துக்கு ஜே!

ஒரு சம்பாஷனை

"என்ன சங்கதி, இருந்தாற் போலிருந்து சுந்தரலிங்கத்தார் கிளம்பியிருக்கிறார்?"

"நல்லதுதான்!"

"என்ன நல்லதுதான்? தமிழரசார் ஏதாவது செய்ய வேண்டுமென்று அடுக்குப்பண்ணிக்கொண்டிருக்கும்போது இந்த மனுஷன் முரட்டுத்தனமாக இன்னொரு பக்கத்தால் துவங்குகிறாரே!

அந்த முரட்டுத்தனம் தான் நல்லதென்றேன். ஏனென்றால் 'ஈழத்தைப் பிரித்துக்கொடு' என்று சுந்தரலிங்கத்தார் அட்டகாசம் செய்யும் போதுதான், 'தனித் தமிழ் நாட்டுப் பிரச்சினை முற்ற முன்னர் 'சமஷ்டி' க்காரரோடு சமாதானமாய்ப் போவது நல்லது என்று அதிகார வர்க்கம் நினைக்கும். 'சமஷ்டி கொடுக்காவிட்டாலும், தமிழருடைய அத்தியாவசிய உரிமைகளையாவது கொடுத்துச் சமாதானமாய்ப் போவோம் என்று முன் வருவார்கள்!"

"ஓ கோ அதுவும் சரிதான்.........சுந்தரலிங்கத்துக்கு ஜே!"

### 'சும்மா இரு அப்பனே!'

பொது மக்களுக்குத் தெரியாத மொழியில் அவர்களோடு அரசாங்கம் தொடர்பு கொள்கிறது, என்று புதினம் குற்றம் சாட்டியிருக்கிறதல்லவா! அதற்கு உதாரணம் போன்ற ஒரு சம்பவத்தை இவ்வாரம் தருகிறேன்: யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள உள்ளூராட்சி நிலையங்களையும், சனசமூக நிலையங்களையும், மேற்பார்வையிடுவதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். முன்பு இந்தப் பதவிகளில் இருந்த இரு தமிழர்களும் சென்ற ஜனவரி மாற்றலாகிச் சென்றுவிட, அவர்களின் இடத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் அசல் சிங்களவர்! 'அசல்' என்று நான் குறிப்பிட்டதன் நோக்கம்—அவருக்குச் சுட்டுப்போட்டாலும் தமிழ் வராது! அவரை—வலி மேற்குப் பகுதிகளிலுள்ள கிராம சபைகள், சனசமூக நிலையங்களை மேற்பார்வையிடும் படி நியமித்திருக்கிறது அரசாங்கம்!

[11-ம் பக்கம் பார்க்க]


மட்டக்களப்புக்

## கோழிக் கள்ளனுக்கு கோர்ட் தீர்ப்பு!

மட்டக்களப்புச் சிருப்பர் திரு. கே. நவரத்தினத்தின் இல்லத்தில் கோழி திருடிய கள்ளன் பிடிபட்ட செய்தி புதினத்தில் முன்பு வெளியானதல்லவா? வேலுப்பிள்ளை செல்வம் என்ற அந்தப் பேர் வழியை ரூபா 300 க்கு இரண்டுவருட நன்னடத்தைப் பிணையில் போகுமாறு மட்டக்களப்பு நீதிபதி திரு தம்பித்துரை தீர்ப்பளித்திருக்கிறார்.

மட்டக்களப்புப் பகுதியில் கோழிக்களவு 'சீசன்' அமோகமாக நடைபெற்றிருக்கிறது! 53 கோழிக்களவுகள் பொலீசில் பதிவு செய்யப்பட்டன! ஆனால் சிருப்பர் வீட்டுக் கோழிதான் கள்ளனைப் பிடித்துக் கொடுத்தது! ஆனாலும் இந்தக் கள்ளன் பிடிபட்டதோடு இந்த கோழிக்களவு 'சீச'னும் ஓய்ந்து விட்டது குறிப்பிடத்தக்கது!

## ★ சிவாஜி ★ எம். ஜி. ஆர். ★ ஜெமினி ஒரே படத்தில் தோன்றுவர்!





பாகப்பிரிவினை, பாலும்பழமும் ஆகியபடங்களைத் தயாரித்த வேலுமணி தயாரிக்கவிருக்கும் 'வீரபாண்டியன் மனைவி' என்றபடத்தில் எம். ஜி. ஆர்., சிவாஜிகணேசன், ஜெமினிகணேசன் ஆகியோர் சேர்ந்து நடிக்க இருக்கின்றனராம்!

## 'இடிந்தகோட்டை' 'கல்கி'யின் சிறுகதை படமாகிறது!

'இடிந்த கோட்டை, என்ற சிறுகதை படமாக்கப்படவிருக்கிறது. மனோகர் பிக்சர்ஸார் எடுக்கவிருக்கும் இந்தப் படத்தை ஸ்ரீதர் டைரக்ட் செய்வார். திரைக்கதை வசனத்தையும் ஸ்ரீதரே ஏற்றுள்ளார். கல்யாண்குமார், தேவிகா, நம்பியார் ஆகியோர் இப்படத்தில் நடிப்பார்கள்.

## நாடகத்துறையில் அமெரிக்க முன்னேற்றம்!
### 'எனது நாடகங்களிலும் இம்முறைகளைக் கையாளுவேன்'
—சிவாஜி

அமெரிக்கா நாடக மேடையில் கையாளப்படும் முறைகளிலும் பாணியிலும் மிகப் பிரமாத முன்னேற்றம் அடைந்திருப்பதாக சிவாஜி கணேசன் நிருபர்களிடம் கூறினார்.

நியூயார்க்கின் மிகப் பிரசித்திபெற்ற ரேடியோ ஸிட்டி இசை மண்டபத்திற்குத் தாம் சென்று வந்ததை அவர் குறிப்பிட்டு ஜோடனைகளும் அமைப்புகளும் மிகப் பிரமாதம் என்றார். அந்த மேடையில் தாம் பார்த்த நாடகம் மிக அழகாக இருந்ததென்றும் எல்லாவிதசிறப்பு முறைகளும் பாணிகளும் இதில் கையாளப்பட்டனவென்றும் சிவாஜி கூறினார்.

''நாடக மேடையில் கையாளப்படும் முறைகளிலும் பாணிகளிலும் அமெரிக்கா மிகப் பிரமாத முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தப் பாணிகளில் சிலவற்றை என்னுடைய சொந்த நாடகத் தயாரிப்புகளில் நான் ஊர் திரும்பிய பிறகு கையாளமுடியுமென்று நம்புகிறேன்'' என்றார்.

நயாகரா நீர்வீழ்ச்சியைப் பற்றித் தாம் மிகவும் கேள்விப்பட்டுள்ளதாகவும் இங்கு வந்தது தமக்கு மிகுந்தமகிழ்ச்சியளிக்கிறதாகவும் சிவாஜி தெரிவித்தார்.

நியூ யார்க்கை விட்டுப் புறப்படுமுன் சிவாஜி புதன்கிழமையன்று பிற்பகல் மாட்னி காட்சிக்குப் போயிருந்தார். ''உண்மையில் முயற்சிக்காமலே தொழிலில் எப்படிவெற்றி பெறுவது'' என்பது இந்த நாடகத்தின் பெயர். பிராட்வேயில் தாம் பார்த்த நாடகங்களில் இதுதான் மிகச் சிறந்ததென்று சிவாஜி பிறகு தமது நண்பர்களிடம் கூறினார்.

அமெரிக்காவில் புத்தக வெளியீட்டுத் தொழிலைப் பார்க்கும் வாய்ப்பு சிவாஜி கணேசனுக்கு வியாழக்கிழமை காலை கிட்டியது.

இந்திய மாணவர்களுடன் சிவாஜி பேசுகையில் அவர்கள் அமெரிக்காவில் கிட்டும் கல்விப் பயிற்சியின் பயனைப்பெற முயற்சிக்கவேண்டும் என்றும், இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கு இதனால் அவர்கள் சிறந்த முறையில் உதவி செய்யமுடியும் என்றும் கூறினார்.

அன்றைய தினம் இந்தநிகழ்ச்சிகளுக்கு முன் சிவாஜி ஸி வி நரஸிம்மனைச் சந்திக்க இரண்டாவது தடவையாக ஐ. நா. வுக்குச் சென்றார். நரஸிம்மன் விசேஷ அரசியல் விவகாரங்களுக்கான துணைக் காரியதரிசியாவார். ஐ. நா. வின் பல அலுவலகங்களை நரஸிம்மன் அவருக்குக் காண்பித்தார். குறிப்பாக ஐ. நா. கட்டிடத்தின் 38-வது மாடியிலிருந்து மன்ஹாட்டன் தீவு மிக அழகாகக் காட்சியளிப்பதையும் காட்டினார்.

வெள்ளிக்கிழமை காலை கணேசன் நியூயார்க்கின் பிரசித்திபெற்ற நடிகர்கள் நடிக்கும் ஸ்ருடியோவுக்குச் சென்றார். அங்குஒத்திகை ஒன்றைப் பார்த்ததுடன் அதைதயொட்டி நிகழ்ந்த விமர்சனங்கள் குறைபாடுகள் எல்லாவற்றையும் கேட்டார்.

நியூ யார்க் நகரைச் சுற்றிப் பார்த்தார் ஸ்டேடின் தீவு படகில் உல்லாசப் பயணம் செய்தார். கோனித்தீவுக்குச் சென்றார், இது புருக்லினில் புகழ்பெற்ற பொழுது போக்குப் பூங்கா ஆகும்

கோனித் தீவில் ஈஸ்டர் விடுமுறைக்கு வந்த மக்களுடன் சேர்த்து கொண்டு அவர்களுடன் நடந்தார் நியூயார்க் நகரில் மீன்காட்சிச்சாலையைப் பார்த்தார் ''நான்பார்த்த மிகச் சிறந்தவைகளில் இது ஒன்று'' என்றார் அவர்,

## ''காதல் என்பது எதுவரை?'' கண்ணதாசன் பாட்டு!

''காதல் என்பது எதுவரை?
கல்யாணகாலம் வரும்வரை!
கல்யாணம் என்பது எதுவரை?
கழுத்தில் தாலி வரும்வரை!''

என்ற கண்ணதாசனின் பாடல் 'பாதகாணிக்கை' படத்துக்காக பதிவு செய்யப்பட்டது.

இந்தப்பாடலை சந்திரபாபு, சுசிலா, ஈஸ்வரி, பி. வி. சீனிவாசன் ஆகியோர் படிக்க விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைத்துள்ளார்.

## அசோகன்மீதுலொறி மோதி கால் முறிந்தது!

''நடிகன் அசோகன் மீது ஒரு லொறி மோதியது. இதனால் அவர் கால் முறிந்தது!''

இது பற்றிக் கூறப்படுவதாவது:

நடிகர் அசோகன் நடு ரோட்டில் போய்க்கொண்டிருந்தார். அப்போது வேகமாக வந்த லொறி அசோகன் மீது மோதியது. அசோகன் தூக்கி யெறியப்பட்டார், அவரது கால் முறிந்து ரத்தம் கொட்டியது!

ரசிகர்களே! கவலைப்படாதீர்கள்! அசோகனுக்கு உண்மையில் இக் கதி நேரவில்லை. ''பாதகாணிக்கை'' படப்பிடிப்புக்காக நெப்டியூன் ஸ்டுடியோவில் இக்காட்சி நடந்தது. இக்காட்சியை கே. சங்கர் டைரக்ட் செய்தார்.

இந்தப் படத்தில் ஜெமினி கணேசன், சாவித்திரி, விஜயகுமாரி, எம். ஆர், ராதா, சந்திரபாபு, எஸ். வி. சுப்பையா ஆகியோர்நடிக்கின்றனர்.

## கண்ணதாசன் ரஷ்யா போகிறார்!

கவிஞர் கண்ணதாசன் ஜுலைமாதம் முதல் தேதி ரஷ்யா போகிறார். அங்கு நடக்கவிருக்கும் அகில உலக எழுத்தாளர்கள் மாநாட்டில் அவர் கலந்து கொள்கிறார், அவருடன் பி. ஜீவானந்தமும் செல்கிறார்.

## கட்டப்பொம்மனைக் காட்டிக்கொடுத்தவன் கதை!

ஈஸ்வரி கலா தியேட்டர் சாரின் 'நீலாம்பரி' என்ற சரித்திர நாடகம் மூன்றாவது முறையாக சென்னையில் நடைபெற்றது.

கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்த விஜயரகுநாத பாஸ்கரத் தொண்டைமான் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் நாடகம் இது.

கதை வசனம் ஆர். எஸ். பாபு, பாடல்கள்: பி. வி. கிரி எஸ். விஸ்வநாதன், சக்திதாசன். இசை: ஸ. கஜபதி.

இந்நாடகத்தை டி. கே. பகவதி, டாக்டர் ராசமாணிக்கனார், சின்ன அண்ணாமலை ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

## தமிழக அமைச்சூர் நடிகர் சங்கம்

தமிழக அமெச்சூர் நாடக சங்கத்தின் நிர்வாகிகளாகக் கீழ்க் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்: கே. வீ: ராகவன், துணைத்தலைவர்: பி. வி. கிரி, அரியலூர் ஏ. நெடுமாறன், செயலாளர்: டபிள்யூ. சந்திரபாபு, துணைச் செயலாளர்கள்: கே. எஸ். மோகன், ஆ. மணிமாறன், ஏ. எஸ். இ. திரன் பொருளாளர்: ந: அரங்கநாதன், மற்றும் 11 பேர் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

**புதிய தொடர்கதை!** **உண்மையில் நடந்தது!** எழுதியவர்: 'அசோகன்'

உல்லாசமாக விடுமுறையைக் கழிக்க வந்தனர் பேர்ஸி தோம்சனும், எடித்தோம்சனும். அவர்களோடு 'எடித்'தின் தங்கை ஏவிஸ் வந்திருந்தாள். அவர்களோடு பிரெட்ரிக் பைவாடேஸூம் வந்தானென்றால் அது நிச்சயம் ஏவிஸூக்காகத்தான். ஆனால்.... விதி சதிசெய்தது. தங்கைக்காக வந்தவன், மணமானவளும் தன்னைக்காட்டிலும் எட்டு வயது மூத்தவளுமான அக்காளைக் காதலித்தான். அதன் விளைவு......?

# விபசாரியா, கொலைகாரியா?

*1921-ம்* வருடத்தில் ஒரு நாள்—

எங்கும பச்சைப்பசேலென்றிருந்தது. ஆமாம், வசந்த காலம் ஆரம்பமாகி விட்டது

நீலவானின் கீழே சிட்டுக் குருவிபோல் இறக்கையடித்துப் பறந்து வந்தாள் எடித் தோம்சன்.

இயற்கையிலேயே உல்லாச வாழ்வில் நாட்டங் கொண்ட எடித்தின் நாட்டம், அப்பொழுது தான் வாலிபப் படியில் கால்வைத்த பிரெட்ரிக் பைவாட்டேர்ஸின்மீதுசென்றது.

முதலாவது மகா யுத்தம் முடிந்து விட்டது. மக்கள் கவலையற்று நடமாடத் தொடங்கினர். தமது விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க பேர்ஸி தோம்சனும் அவன் மனைவி எடித்தோம்சனும்'ஷங்கிலின்' என்ற இடத்திற்கு வந்திருந்தனர்.

அவர்களோடுகூட எடித்தின் தங்கை ஏவிஸ் கிரேடனும், பேர்ஸி தோம்சனின் நண்பன் பிரெட்ரிக் பைவாட்டேர்ஸூம் வந்திருந்தார்கள்.

பேர்ஸியும் எடித்தும் இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தனர், மெல்ல ஏவிஸைத் தனியே அழைத்துச் சென்று உல்லாசமாக உரையாடினான் 19 வயதான பிரெட்ரிக். அவர்கள் மத்தியில் காதல் துளிர்விட்டுக் கொண்டிருந்தது. உண்மையில் மணமானவளும் 27 வயது நிரம்பியவளுமான எடித்தைப்பற்றி ஆரம்பத்தில் பிரெட்ரிக் சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை. அவன் நாட்டமெல்லாம்அவள் தங்கை ஏவிஸ்மீதேயிருந்தது.

எடித்திலும்பார்க்க பிரெட்ரிக் எட்டு வயது இளையவன். அவளது தம்பியாரின் பாடசாலை நண்பன் பிரெட்ரிக். பேர்ஸி தோம்சனோடு ஆறு வருடம் குடும்பவாழ்க்கை நடத்திவிட்ட எடித்துக்கு பிரெட்ரிக்கைப்பற்றிய சிந்தனையே ஆரம்பத்தில் எழவில்லை.

மாலைமயங்கும் நேரம். சூரியனின் பொன் வட்டத்தில் பாதியைக் கடல்விழுங்கியிருந்தது. ஆலம் விரிகுடாவில் தனியே நின்றபடி இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தாள் எடித். கற்பனையில் வாழும் சுபாவமுள்ள எடித்துக்குத் தனிமை போதை ஏற்றியது.

பின்னால் யாரோ வரும் காலடிஓசை கேட்டது. மெல்லத் திரும்பிப் பார்த்தாள். பிரெட்ரிக் பைவாட்டேர்ஸ் வந்து கொண்டிருந்தான்.

"என்ன அழகான காட்சி" என்றான் பிரெட்ரிக்,

"இங்கு வீசும் தென்றலில் தான் எவ்வளவு காந்த சக்தி" என்றாள் எடித்.

எடித்தின் கண்களை உற்றுப் பார்த்தான் பிரெட்ரிக். போதையேறிய அவள் கண்கள் பாதி மூடிக்கிடந்தன, அதன்பின் —

திரை விலகிவிட்டது: நிலா ஒளியிலே வழிதடவி, கணவன் இருந்த இடத்தை நோக்கி மெல்ல நடந்தாள் எடித். அவள் உள்ளம் பிரெட்ரிக்கைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அனுபவப்படியில் காலவைத்த ஆரம்பம். தனது சிநேகிதியின் அக்காள் எடித்தின் கவர்ச்சிக்கு உலகில் வேறு எந்தப் பெண்ணுமே நிகராக முடியாது என்ற முடிவுக்கு வந்தான் பிரெட்ரிக்.

விடுமுறைமுடிந்து எல்லோரும் ஊர்திரும்பப் போகிறார்கள். பிரெட்ரிக்கைத்தங்களது வீட்டில் 'போட'ராக வந்து தங்கும்படி அழைத்தாள் எடித். பரந்தநோக்கமும் அமைதியான சுபாவமுங் கொண்ட பேர்ஸி தோம்சனும்வற்புறுத்தினான். அன்றிலிருந்து தோம்சன் குடும்பத்தில் ஒருவனானான் பிரெட்ரிக் பைவாட்டேர்ஸ்.

"எங்கள் வாழ்விலேயே மறக்க முடியாத பிறந்தநாள்" என்று பிரெட்ரிக்குக்கு எழுதிய கடிதத்தில் அவனது 19-வது பிறந்ததினத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறாள் எடித். 1921-ம் வருடம் ஜூன் 27-ல் வந்த அவனது பிறந்த நாளன்றுதான் இருவரது காதலும் முளைவிட்டதென்பது அவள் கடிதத்திலிருந்து தெரிகிறது.

வேண்டியபோதெல்லாம்விரும்பிய இடத்துக்கு இருவரும் தனியே கிளம்பிச்சென்றனர். பேர்ஸி தோம்சன் 'ஏன்' என்று அவர்களைக் கேட்பதில்லை. 32 வயதான அவனைப் பொறுத்தவரையில் பிரெட்ரிக் ஒரு சிறுபையன். எடித் ஒரு பொறுப்புள்ள மனைவி. அவர்கள்மீது அவனுக்குச் சிறிதும் சந்தேகம் விழவில்லை.

"இப்பொழுதுதான் காதல் என்றால் என்ன என்பதை உணருகிறேன்" என்றாள் எடித். இதற்குமுன் அவள் காதலை அனுபவித்ததில்லையாம். கணவன்மீது அவள் கொண்டிருந்த அன்பையும் அவள் முற்றாகத் துறந்து விட்டாள்.

"ஆறு வருஷத்துக்குமுன் நான் ஆசையாகக்கைப்பிடித்த கணவன் என் இச்சைகளைப் பூரணமாகத் திருப்திப்படுத்த இயலாதவன்" என்கிறாள் எடித். தனக்கு அது பெரிய ஏமாற்றமாம்.

இத்தனைக்கும் பேர்ஸி தோம்சன் மிக அமைதியான போக்குள்ளவன். மிக நேர்மையானவன். ஒரு தகுதிவாய்ந்த நல்லபிரஜை. குடும்பப்பொறுப்புள்ள நல்ல கணவன். கஷ்டப்பட்டுச் சப்பாதிப்பவன், அவன் வேலை செய்த கப்பல் கம்பெனி அதிகாரிகளிடம் திறமைசாலி என்று பெயரெடுத்தவன். ஆனால் கட்டிய மனைவியைச் உற்சாகப்படுத்தும் திறமை அவனிடம் இருக்கவில்லை. இன்பக்கேளிக்கைகளில் நாட்டங்கொண்ட மனைவியைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் பொறுப்புள்ள கணவனாக மட்டுமே அவன் நடந்து வந்தான். அதனால் அவளுக்குக்கிடைத்ததெல்லாம் ஏமாற்றம்தான். தன் கணவன் தன்னைத் தூக்கியெடுத்துப் பிழிந்து நிலத்தில் மோதி உருட்டியெடுக்கவேண்டும் என்று அவள் அங்கலாய்த்தாள். ஆனால் அவனோ ஒன்றை மட்டும் விட்டு விட்டு மற்ற எல்லா வகைகளிலும் நல்ல கணவனாக நடந்து அவளைத் திருப்திப்படுத்துவதாக நினைத்தான்.

எடித்தைக் கல்யாணம் செய்த சிறிது காலத்தில் பேர்ஸி தோம்சன் யுத்தத்தில் சேர்ந்து பணியாற்றினான். ஆனால் அவனுக்கு இருதய நோய் கண்டுவிட்டதால் தொடர்ந்து பணியாற்ற முடியாமற் போய்விட்டது. மனைவியிடம் திரும்பி வந்ததும் இல்போர்ட்டில் ஒரு வீடு வாங்கி அங்கு இருவரும் சென்று குடியேறினர்.

பணவருவாய்க்குக் குறைவில்லை. பேர்ஸி தோம்சன் ஒரு கப்பல் கம்பெனியில் குமாஸ்தாவாகக் கடமையாற்றினான். எடித் ஒருமொத்த விற்பனை லிமிட்டரி கம்பெனியில் மனேஜராகக் கடமையாற்றினாள். வாழ்க்கை அமைதியாகச் சென்று கொண்டிருக்கும் போதுதான் துரதிர்ஷ்டம் பிடிக்க ஆரம்பித்தது.

ஒருநாள்—

வீட்டு முற்றத்திலிருந்து எடித் தைத்துக்கொண்டிருந்தாள். சமீபத்தில் உட்கார்ந்திருந்தனர் பேர்ஸியும், பிரெட்ரிக்கும்.

"எனக்கு ஒரு ஊசி வேண்டும்" என்றாள் எடித்.

ஊசி கொண்டு வருவதற்காக உள்ளே எழுந்து சென்றான் பிரெட்ரிக்,

"நீ வரவர மோசமாகிவிட்டாய். உனக்கு வேலை செய்வதற்குச் சதா ஒருவர்பக்கத்தில் இருக்கவேண்டும் போலிருக்கிறது" என்றான் பேர்ஸி தோம்சன்.

அவன்கூறியதன் அர்த்தத்தை அவள் வேறு விதமாக எடுத்துக் கொண்டாளோ என்னவோ, புயல்வீச ஆரம்பித்துவிட்டது.

இவர்கள் பேசுவதைத் தூரத்தில் வரும்போதே கவனித்துக் கொண்டுவந்தான் பிரெட்ரிக். ஆனால் அவன் தலையிடுமுன் தீ அணைந்துவிட்டது.

எல்லோரும் எழுந்து தேநீர் அருந்தச்சென்றனர். விட்டகுறையைத் தொடக்கினாள் எடித்.

பேர்ஸி தோம்சன் பொறுமையை இழந்தான். கதிரைகள் பறந்தன. மேசை புரண்டது. எடித் அறைமூலையில் தூக்கிஎறியப்பட்டாள். அவள் வீழ்ந்துவிட்டதைக் கண்டதும் பிரெட்ரிக்குக்குஇதயமே வீழ்ந்து விட்டது. பேர்ஸி தோம்சன்மீது புலி போலப் பாய்ந்தான் அவன். இருவரும்கட்டிப்புரண்டனர்.

அன்று நடந்த சண்டையின் விளைவு, பிரெட்ரிக்கை உடனே வீட்டை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டான் பேர்ஸி: பாவம், அதன் பலாபலன் எப்படிப்பட்டது என்பதை அவன் சிந்தித்துப் பார்க்க வில்லை.

[ தொடரும் ]



மங்கையர் அணியும்

தங்க நகைகள்



★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும் ஓடர்கள் கொடுப்பதற்கும்

பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.



அப்துல்லா & கோ
அனுமதி பெற்ற
கண் பரிசோதகர்
கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 486

சிறுகதை

# ‘தனம், நீ தியாகி அம்மா!’

பாடசாலையிலிருந்து திரும்பிய மகேஸ்வரி டீச்சருக்கு ஒன்றும் ஓடவில்லை; ஒருவேலையிலும் மனம் நாடவில்லை. தெளிவற்ற, வேதனை இழையோடிய நிலையில் அவள் குழம்பிக் கொண்டிருந்தாள். அவள் இதயச் சோலை அன்றைய சம்பவச் சூருவளியாக மாறி பிய்த்து எறிந்தது. பாடசாலையில் சின்னஞ் சிருருடன் அவள் படும்பாடு கொஞ்சமல்ல. களைப்பும் சோர்வும் அவளுக்குப் பழக்கப்பட்டவை. அதில் வேதனைகிடையாது. அவள் வேதனைக்குரிய காரணம் வேறு.

‘தனம்’ அவள்தான் மகேஸ்வரியின் குழப்பத்திற்குக் காரணமாயில்லா விடினும் காரியமாயுள்ளவள். மகேஸ்வரி டீச்சரின் பள்ளிச் சிறுமிகளில் ஒருத்திதான் தனம். அவள் இரண்டு நாட்களாகப் பள்ளிக்கு வரவில்லை. அவளது வராமை இரண்டு விதத்தில் அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. அவள் பள்ளிச் சிறுமிகளில் பலரை மகேஸ்வரிக்குப் பிடித்திருந்தும், தனத்தின்மீது ஓர் அலாதியான பிரீதி. அவளிடம் உயிரையே வைத்திருந்தாள். தனத்திடம் அவள் காட்டும் அன்பும், வைத்திருக்கும் பாசமும் அளப்பரிது.

பாலசிங்கம் என்ற ஆசிரியருக்கும் மகேஸ்வரி டீச்சருக்கும் ஏதோவொன்று இருக்கத்தான் செய்தது. சாதாரணக் கவர்ச்சியைக் குழைத்தெடுத்த மகேஸின் உடலமைப்பில், அவன் உள்ளம் இழுபட்டது. மனிதன் பணத்தையோ, மற்றும் பொருட்களையோ பாதுகாக்கும் அளவு மனதைப் பாதுகாப்பதில்லை. அதைப்பற்றிக் கவலைப்படுவதுமில்லை. ஒரு பெண்தன் மனதை லேசாகத் தொட நினைத்தாலும், வாலிபன் அதை அவளிடம் சரணடைய வைக்கத் தயாராகிருன். ஏதோஒரு சாதனை செய்துவிட்டதாக வேறு பெருமைப் பட்டுக் கொள்கிருன். அந்த அளவிற்கு அவன் நினைவுகள் பூரிப்படைகின்றன. இதேநிலையில்தான், பாலசிங்கம்—மகேஸ்வரி சந்திப்புதொடர்ந்து வளர்ந்தது.

இவர்கள் இருவருக்கும் இணைப்பு அதிகாரியாக விளங்கியவள் தனம். சிறுவர்கள் மட்டும் இல்லாதிருப்பின், உலக அரங்கில் எத்தனையோ காதல் கதைகள் உருத்தெரியாமல் போயிருக்கும்.

அவர்கள் அன்பிலே உருவாகிய காதல்செடி, தனத்தின் பாதுகாப்பிலே செழித்து வளர்ந்தது. பாலசிங்கம் எனும் கொம்பிலே படர் கொடியானுள் மகேஸ். அதைப் பேணி வளர்த்தாள் தனம்.

தனத்தை எதிர்பார்த்து வாசலில்நின்ற மகேசுக்கு தனம் வரும் நிலையைக் கண்டதும்‘ தூக்கிவாரிப் போட்டது. ஓடோடிச் சென்று அவளை அணைத்து வந்தாள்—மகேஸ் டீச்சரைக் கண்டதும், சொல்ல வந்ததை விட்டு, “ஓ……”வென்று கதறிஅழுதுவிட்டாள் தனம். மகேசுக்கு ஒன்றும் புரியவில்லை. பெரிய தர்ம சங்கடமாகி விட்டது.

“தனம், ஏம்மா அழுகிறே?” ,இரண்டு நாளாய்ப் பாடசாலைக்கு ஏன் வரவில்லை சுகமில்லையா’? ‘அவரைக்காணவில்லையா’‘ இப்படிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனுள் மகேஸ். தனம் விக்கி விக்கியழுதாளே ஒழியப் பதில் இல்லை.

“என்ன, நான் கேட்கிறேன் நீ அழுது கொண்டே போகிருய். பதில் சொல்ல மாட்டாய்” டீச்சர் அதிகாரத்தொனியில் கேட்டாள்.

“தனம் அழுதுகொண்டேசொன்னுள். சொல்லிக் கொண்டே அழுதாள். ஏன் அழுகிருள், என்ன சொல்லுகிருள், என்பது மகேசுக்குப் புரியவில்லை.

“தனம், அழாதேம்மா!” அழாமல் சொல்லு. என்னட்டச் சொல்ல ஏம்மா பயப்படுறே? நடந்ததைச் சொல்லம்மா? இல்லேன்னு டீச்சர் அழுவா?” வாஞ்சையோடு கேட்டாள் மகேஸ். மகேஸ் ஒருவாறு அவளைத் தேற்றினுள். அவளை அணைத்து முதுகில் தொட்டதும், “ஆ! அம்மா” என அலறினுள் தனம். சட்டையைக் கழற்றிப் பார்த்தமகேசுக்குத் திகைப்பும், ஆத்திரமும், அழுகையும், ஒருங்கே வந்தன. அவள் உள்ளம் கொதித்தது. நரம்புகள் துடித்தன. அவள் கண்களில் நீர் முட்டியது.

“உன்னை யாரம்மா அடித்தது.” மகேசின் குரலில் அன்பு, பாசம், ஆவேசம், துடிப்பு அத்தனையும் மிளிர்ந்தது.

“ஐயா……டீச்சர்” தனம் அழுது கொண்டே கூறினுள்.

“ஐயாவா இப்படி அடித்தார்; அவ்வளவுக்கு நீ என்ன தவறு செய்தாய்ம்மா?”

‘’ஆமாம் டீச்சர், ஐயாவே அடித்தார்.’ இப்போ அவள் நிதானமாகக் கூறினுள். கண்களில் நீர் வற்றியது. அழுது காய்ந்த நீரின் அடையாளம் வெங்காயச் சருகுபோல் அவள் பிஞ்சுக் கன்னத்தில் ஒட்டியிருந்தது.

“எதற்காக ஐயா அடித்தாங்க?” அவள் கேள்வியில் ஆவல் மிளிர்ந்தது.

---

**‘மணியம்’**

---

“பாலசிங்கம் மாமா டீச்சர், கடிதம் தந்தார். இதை வீட்டில் புத்தகத்திற்குள் வைத்துவிட்டு மறந்துவிட்டேன். காற்று கடிதத்தை வெளியே வீசியதால், ஐயா கண்டிட்டார். அதைப் படித்து விட்டு என்னைக் கூப்பிட்டார்”……… இப்படிக் கூறிக்கொண்டே என்ன நினைத்தாளோ அழுது விட்டாள்.

தனம் தொடர்ந்தாள்.

“ஐயா, கூப்பிட்டார் டீச்சர், நான் போனன்—இந்தக் கடிதம் எங்கால? யார் தந்தது? ‘‘என்று கேட்டார்” இப்படிப் பல கேள்விகள் கேட்டார். நான் ஒன்றுக்கும் பதில் சொல்லலே.

“பாலசிங்கத்திற்கும் — டீச்சருக்கும் கடிதம் கொடுப்பதுதானே வேலை—இதற்காகவா பள்ளிக்கு உன்னை விட்டது” எனக் கேட்டார். “இல்லை” எனப் பொய் சொன்னேன்.

‘‘கடிதத்தைக் காட்டி, பிரம்பை நீட்டிக் கேட்டார்”

“ஆமாம் என்றேன்”

“செய்வதைச் செய்து விட்டுப் பொய்யும் வேறே” “அப்புறம், அப்புறம்” அவளால் சொல்ல முடியவில்லை. விம்மலுக்கும் அழுகைக்குமிடையே “அடித்தாங்க, டீச்சர்’ என ஒருவாறு கூறினுள்.

மகேசுவுக்குப் பொறுக்கமுடியவில்லை, காப்பி தயாரித்து இருவருமாகக் குடித்தபின், தனத்தை வீட்டிற்கு அனுப்பினுள்—

தனம் மீண்டும் மகேஸ்வரி டீச்சரிடம் சென்றது, தனத்தின் தந்தைக்குத் தெரியவந்தது,

பள்ளிக் கூடம் போகாவிட்டாலும் பாதகமில்லை. இவளைக் கட்டில் போடவேண்டும் என்று எண்ணினுர்—அப்படியே செய்தும்விட்டார்.

முற்றத்து மல்லிகைச் செடியுடன், தனத்தைக் கட்டிவிட்டு வெளியே சென்ருர். தான் வரும்வரை அவிழ்க்கப்படாது என மனைவிக்குக் கட்டளையிட்டார்.

கணவனின் கட்டளைக்குப் பயந்தும், பிள்ளையின் பாசத்திற்கு வெந்தும் அவதிப்பட்டாள் தாய். பிள்ளைக்கு கட்டிய கட்டுடனே சோறூட்டிவிட்டுத் தன் வேலையைக் கவனித்தாள்—

வெளியே சென்ற தந்தைக்கு மனம் நிலையிலில்லை—பெற்ற மனம் பித்தல்லவா. ஓடோடி வீடுவந்தார். “தனம்! என் கண்ணு” என்று கூறியபடியே தனத்திடம் வந்தார்.

அவள் கட்டிய கட்டுடனேயே உறங்கியவள்போல் தலையைக் கீழே போட்டபடி இருந்தாள்.

‘தனம்’ தலையை நிமிர்த்திக் கட்டை அவிழ்த்துப் பார்த்தார். அவருக்கு வயிறு பற்றி எரிந்தது. வயிற்றைப் பிருண்டியது. பேச்சு மூச்சற்ற நிலையில் தனம் காணப்பட்டாள்.

டாக்டரிடம் கொண்டு சென்ருர். ஏதோ விஷஜெந்து தீண்டி இறந்து விட்டதாக டாக்டர் கூறினுர்.

மல்லிகைச் செடியை வெறித்தபடியே பார்த்துக் கொண்டு மரத்தோடு மரமாக நின்ற தந்தைக்கு, அச்செடியின், பக்கத்து வெடிப்பில் தலை காட்டி நின்ற பாம்பின் உருவம் தெரியவா செய்தது.

தனம் சென்று விட்டாள். இல்லை—பாலசிங்கம்-மகேஸ் காதலின் தியாகமாகவல்லவா சென்றுவிட்டாள். செய்தியறிந்த மகேஸ் கதறியேவிட்டாள்—ஆனல் அவள் இதய ஆழத்தில், ‘தனம் நீ, தியாகி அம்மா’ என்றவார்த்தைகள் எழுந்து, மடிந்தன.

பிரச்சினைக் கதை

உங்கள் கருத்தென்ன?

# 'காதலன் செய்த தியாகம்'

அமுதா! அன்பே, என் அமுதா, என்று அழைத்துவந்த நான் இன்று வெறும் அமுதா என்று அழைக்கவேண்டிய நிலையிலேயிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம், விதியின் விளையாட்டா? அன்றேல் நாம் செய்த வினையின் பயனா?

நானும் நீயும் ஒன்றாகக் கூடிவிளையாடிய, குழந்தைக்கால நாட்கள் முதல், இன்றுவரை, நீ காட்டிய அன்பை என்னால் மறந்திடப் போமா? 'அத்தான், அத்தான்' என்று நீ அழைக்கும் தேன் சொற்கள் மறந்துபோன காரியமாகிவிட்டதே!

நீ என்னைக் காதலித்தது எவ்வளவுக்கெவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கவ்வளவு நானும் உன்னைக் காதலித்தது உண்மைதான் அமுதா. ஆனால் அதை நினைத்து வருந்திப் பயனில்லை.

நமது காதலை உதறி விட்டானே இவன் என்று நீ விரக்தியடைந்திருப்பாய் என்று நினைக்கிறேன்.

கடந்த காலத்து நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மீண்டும், மீண்டும் மனதில்

தவறு செய்பவர்கள் அனைவரும் தவறு செய்யவேண்டுமென்ற நோக்குடனா தவறு செய்கிறார்கள்?

வாழ்க்கையில் ஒரு தடவை தவறியவர்கள், மீண்டும் தவற வேண்டுமா?

குணமுள்ளவர்கள்கூட குற்றம் புரியவில்லையா?

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அகப்பட்ட பெண்ணைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

"வண்ணை சிவராசா"

'என்ன இவர் கேள்விமேல் கேள்வி கேட்டு புதிர் போடுகிறாரே என்றுநீநினைக்கப் போகிறாய்.

உனக்குத்தான் தெரியுமே அமுதா, எனது நண்பன் ஆனந்தனை! அவனுக்கு ஒரு தங்கை சுமதி என்று பெயர். அவனது அன்பை யெல்லாம் சொரிந்து வளர்த்திருந்தான். அவளை அதிக அன்பினாலோ அல்லதுசெல்லத்தினாலோ அவள் வாழ்க்கையில்சந்தர்ப்ப வசத்தினால் தவறிவிட்டாள்.

**பரிதாபத்துக்குரிய ஒரு பெண்ணின் வாழ்வை வளம்படுத்துவதற்காகத் தன்னை உயிருக்குயிராக காதலிக்கும் பெண்ணைத் துறக்கிறான் ஒரு இளைஞன்.**

**இந்த இளைஞன் செய்த தியாகம் சரிதானா?**

**ஒரு பெண்ணை வாழவைப்பதற்காக இன்னொரு பெண்ணின் வாழ்வை இவன் நாசம் செய்துவிட்டானா?**

**உங்கள் கருத்து என்ன?**

**சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துக்கள் புதினத்தில் வெளியிடப்படும்.**

தோன்றும்போது, வெறுப்பு மட்டுமல்ல ஆத்திரம்கூட வரலாம்.

அன்று நீ கூறியது நினைவிருக்கிறதா? மேல்படிப்புக்காக, நான் சென்னை செல்லும்போது, முதன்முதலில், பலாலி விமானநிலையத்துக்கு வந்திருந்தாய்—ஆமாம், அன்று எனக்குப் பிடித்தமான, இளம் நீலவண்ணச் சேலையை நீ உடுத்தியிருந்தாய். அன்று உன் அழகு, நீல ஆகாயத்தில் ஒளிந்து விளையாடும் முழுமதியைவிடப் பன்மடங்கு மேலாக இருந்தது.

அன்று நான் "நாலுவருடங்கள் எனக்காகப் பொறுத்திருப்பாயா, அமுதா?" என்று கேட்டபோது நீ என்ன விடையளித்தாய் என்பது நினைவிருக்கிறதா?

"நாலு வருடங்களென்ன, நாலு யுகங்கள்கூட உங்களுக்காக நான் காத்திருப்பேன்!" என்று நீ அன்று கூறியது, இன்றும் என் காதில் ஒலிக்கிறது அமுதா!

அதுமட்டுமா? பட்டதாரியாகியும், படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் கிடைத்ததா? படிப்பிருந்தும் ஒருவருட காலமாக வேலையற்ற நான், அயலார் சுற்றத்தாரின் கண்டனத்துக்கு ஆளாகியிருந்தேன். அப்பொழுதெல்லாம் அமுதா, உனது இன்முகம் அல்லவா எனக்கு ஆறுதல் தந்தது!

"படிப்பிருக்கின்றது. நிச்சயமாக உங்களால் வாழ்வில் முன்னேறமுடியும்" என்ற தெம்பை ஊட்டியவள் நீயல்லவா? இவைகள் அனைத்தும் இன்று பழங்கதைகளாக வல்லவா போய்விட்டன!

அமுதா! உலகில் பிறந்தவர்களெல்லாரும் தவறு செய்யவா பிறந்தார்கள்?

துடிதுடித்துப் போய் விட்டான் ஆனந்தன். குடும்பக் கௌரவம் போய் விட்டது என்று ஆனந்தன் வருந்தினான். வாழ்க்கையில் தவறிய பெண்ணை ஏற்றுக்கொள்ள எந்த ஆண்மகன் முன்வருகிறான்?

கன்னியாகவே குழந்தைக்குத் தாயாகும் நம்நாட்டுப் பெண்கள் அனைவரும் வேண்டுமென்றா தவறுகிறார்கள்? எத்தனை பேர் சந்தர்ப்ப வசத்தினால் தவறிவிடுகின்றனர்! பின்பு அதற்காக மிகவும் வருந்துகின்றார்கள்!—அப்படிப் பட்டவள்தான், சுமதியும்.

அமுதா, உனது அழகுக்கும் பண்புக்கும்—இத்தனைக்கும் மேலாகப் பணத்துக்கும் எத்தனை ஆடவர்கள் மணமுடிக்கக் காத்திருப்பார்கள்!

கற்பின் மாணிக்கமான உன்னை அடைபவன் அதிர்ஷ்ட சாலி மட்டுமல்ல, பாக்கிய சாலியும்கூட!

ஆனால், அமுதா!

ஆனந்தனின் தங்கை நிலையை நினைத்துப்பார்! அவளது இருண்ட வாழ்வுக்கு ஒளியூட்ட எந்தவாலிபன் முன்னுக்கு வருவான்? அவளது வாழ்வு இருண்டு போக வேண்டியதுதானா?

ஆகவே என்னை மன்னித்துவிடு அமுதா!—அந்த அபலை சுமதியை நான் மணந்து விட்டேன்!

தூய காதலைத் துறக்கும் நீ ஒரு தெய்வம்!

[யாவும் கற்பனையே]

# யுவதிகளை வாலிபர்கள் மணக்கமுடியாது!

## ஆஸ்திரேலிய ஆதிவாசிகளின் அதிசய வழக்கம்!

ஆஸ்திரேலியாவில் இன்று வசிப்பவர்களெல்லாம் பிரிட்டனிலிருந்தும் வேறு பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஆதியில் வந்து குடியேறியவர்கள் என்பதுதான் பலருக்குத் தெரியும். ஆனால் இவர்கள் வந்து குடியேறுமுன் ஆஸ்திரேலியா மனிதர்கள் இல்லாத வெற்றுப் பிரதேசமாக இருந்ததா?

இல்லை. இங்கு வாழ்ந்த ஆதிக்குடிமக்கள் ஒருவகை நாடோடி இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இப்பொழுதுஅருகிக்கொண்டு வந்தாலும் சுமார் பதினையாயிர வருடங்களுக்கதிகமாக இவர்கள் ஆஸ்திரேலியாவிலுள்ள மலை அடிவாரங்களில் வசித்து வந்திருக்கிறார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள், இந்த ஆஸ்திரேலிய ஆதிவாசிகள் இந்தியாவிலிருந்தே இங்கு வந்து குடியேறியிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். இவர்களது மதக்கோட்பாடுகள் இந்தியரதற்குச் சிறிது ஒத்திருக்கிறதாம்,

தமது பிரத்தியேக உணவு வகைகளும், தண்ணீரும் தினமும் தமக்குக் குறையாது கிடைப்பதற்காகத் தமது மூதாதையர் நாடு பூராவும் அவற்றை சிதறியிருக்கிறார்கள் என்று இவர்கள் நம்புவதால்இந்த வகுப்பினர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருக்காது நாடோடிகளாகத் திரிகிறார்கள். இந்த உணவுவகைதமக்கு நிரந்தரமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் பூஜைகள் நடத்துகிறார்கள்.

இவர்களது பழக்க வழக்கங்கள் மற்றவர்களதைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதால் ஆஸ்திரேலியாவில் தற்போது வாழ்பவர்களுடன் இவர்களால் ஒன்றி வாழமுடியவில்லை.

அண்ணனும் தங்கையும் ஒருவரோடொருவர் பேச வேண்டுமானால் எதிர் எதிராக நின்றே பேசவேண்டும். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காது பேசவே கூடாது.

இன்னொரு விநோத வழக்கமும் இவர்கள் மத்தியில் இருந்து வருகிறது. கன்னிப் பெண்களை வயோதிகர்கள் மட்டுந்தான் மணம் செய்யலாம். இதனால் வயோதிகர்கள் தமது அந்திய காலத்தில் கவனிப்பாரற்று அல்லல்படாமல் வாழ முடியும் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

ஒரு பெண் குழந்தை பிறந்ததும் அவளது திருமணம் உடனேயே நிச்சயிக்கப்பட்டுவிடுகிறது. ஆனால் கிழவர்களைத் திருமணம் செய்துகொண்ட சில வருடங்களில், கணவர்கள் இறந்து விட்டால் கணவனின் தம்பியோ தமையனோ புருஷனை இழந்த பெண்ணை மணந்துகொள்கிறார்கள்' இந்தவழக்கத்தினால் ஒருவனுக்குப் பலமனைவிகள் சேர்ந்துவிடுவதுமுண்டு.

இவர்கள் பழக்கங்களில் மிகக்கண்டிப்பாக அனுசரிக்கப்படும் வழக்கம் ஒன்றுண்டு. அது மாமியார்களைப்பற்றியது மருமகனைக்கண்டு விட்டால் மாமியார் உடனடியாக அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட வேண்டும். மருமகனோடு அவள் பேசவோ அல்லது கண்ணுக்கெட்டிய தூரத்தில் அவள் நிற்கவோ கூடாது. மாமியின் சகோதரிமாரைப் பொறுத்தவரையிலும் இதே முறை அனுசரிக்கப்படவேண்டும் ஆகவே தமது பெண்களைத் திருமணம் செய்து கொடுத்துவிட்ட தாய்மாகள் எங்கு சென்றாலும் கையில் ஒரு முகமூடியைக் கொண்டுசெல்வார்கள். தமது மருமகன்களை எதிர்பாராத விதமாகச் சந்தித்துவிட்டால் உடனே முகமூடியை அணிந்துகொண்டு அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிடுவார்கள்,

இந்தச் சாதியினர் இப்போது ஆஸ்திரேலியாவில் குறைந்துகொண்டு வருகிறார்கள். சில வாலிபர்கள் உடையணிந்துகொண்டு பட்டினப் பகுதிகளுக்கு வந்து தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள்; சிலர் சவரக்கத்தி கூட உபயோகிக்கிறார்களாம்.

காலகதியில் இந்தச் சாதியினர் தமது பராம்பரிய பழக்க வழக்கங்களை விட்டு நாகரீகமுள்ளவர்களாகத் திகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

✽ காதலும் இனக்கவர்ச்சியும் ✽ எழுத்தாளரா, வைத்தியரா? ✽ ஒரு நாக்கு மட்டும் ஏன்? ✽ மலிவான பொருள் ✽ 'அவர்' என்றதன் அர்த்தம் ✽ குத்துக்கரணம் அடிக்கும் கெட்டிக்காரர்.

# கேள்வி - பதில்!

ரமணன்

எஸ். சௌந்தரராஜன்—
கொழும்பு—7

கே:- எழுத்தாளர் மாநாட்டின் கவியரங்கம் பற்றிய கருத்தென்ன?

ப;- கவியரங்கத்திற்கு நான் போகவில்லை. ஆனல் நீல வாணனும் இ. நாகராஜனும்தான் கவியரங்கக் 'கப்'பை தட்டிக்கொண்டு போய் விட்டார்கள் எனக் கேள்விப்பட்டேன்,

கே:- எழுத்தாளர் மாநாட்டில் ஏன் பொன்னுத்துரை பேசவில்லை?

ப:- மௌனம் கலகத்தின் ஆரம்பமாக இருக்கலாம்!

ஐ. பாலசுப்பிரமணியம்—
வேலணை இழக்கு

கே;- இந்நாட்டில் மலிவாகக் காணப்படுவது எது?

ப:- பத்திரிகைகள்!

சி. சுப்பிரமணியம்– சுழிபுரம்

கே:- முற்காலத்திற்கும் தற்காலத்திற்கு முள்ள வித்தியாசம் என்ன?

ப:-அவர்கள் மக்கள்; இவர்கள் மாக்கள்!

வி. ஜெயா—
திருநெல்வேலி தெற்கு

கே:- தங்கவேலுவின் மனைவி எம். சரோஜாவா?

ப:- இது தெரியாதா தங்களுக்கு? இப்பொழுதெல்லாம் நடிகர்களை நடிகைகள் திருமணம் செய்துகொண்டு பின்னர் பேட்டியில் தமது கணவரை 'அவர்' எனக் கூறுவது 'ஒருபாஷனுக'ப் போய்விட்டது; இந்தப் 'பாஷனுக்' கேற்ப எம் சரோஜா தங்கவேலுவைத் தினகரன் பேட்டியில் 'அவர்' எனக் கூறியிருக்கிருர்!

கே:- சிந்திக்க முடியாதது எது?

ப:- சிந்திக்க முடியாததைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லையே!

எஸ். சோமஸ்—செங்கலடி

கே:-அரசியல் குட்டிக்கரணம் அடிக்க எத்தனிக்கும் இளம் அரசியல் வாதிக்குத் தாங்கள் கூறும் புத்திமதியாது?

ப:- 'உம்மிலும் பார்க்க வவுனியாவிலுள்ள குரங்குதான் நன்ருக குத்துக்கரணம் அடிக்கின்றன!' எனக் கூறுவது தானே!

## பரிசுக்கேள்வி
### கலையரசன் பண்டத்தரிப்பு

கே:- காதலும் இனக்கவர்ச்சியும் ஒன்ரு? அல்லது வேறு வேரு?

ப:- முதலாவது தேன், இரண்டாவது 'சொக்கிளேட்' தேன் மருந்துக்கும் ஆகும். தெய்வத்துக்குப் படைக்கவும் உதவும். சொக்கிளேட்டை நாக்கின் ருசிக்காக மட்டும் சாப்பிடலாம், ஆனல் தேனை விடச் சுவைக்கும்!

கே. குஷிநாதன் -காரைநகர்

கே:- நீங்கள் பெரிய மல்யுத்த வீராமே! கேள்விப்பட்டதும் மீசை துடிக்கிறது. வரட்டுமா ஒருகை பார்க்க?

ப: கைபார்ப்பது இருக்கட்டும், முதலில் உமது மீசையை கழற்றிவிடும். இப்பொழுது புல்தடுக்கிப் 'பொடியங்கள்' எல்லாம் கொம்பு மீசை வைக்கத் தொடங்கிவிட்டார்கனே!

ஆர். எம், துரைராஜ —
சர்ணியா.

கே:- எதிராளிகளை ஏமாற்றுவது எப்படி?

ப:- அவர்களை ஏமாற்ருமல் இருந்து!

ஆ. விமலாதேவி—கண்டி

கே:- நான் இதுவரை எத்தனையோ கேள்விகள் கேட்டு விட்டேன், நீங்கள் ஏன் பதில் தரவில்லை?

ப:- தாங்கள் கேட்ட அத்தனை கேள்விகளும் வைத்தியக்கேள்விகளாகவே இருக்கின்றன. நான் ஒரு டாக்டராகினல்தான் வைத்தியம் செய்ய முடியுமே தவிர ஓர் எழுத்தாளனுக மட்டுமே இருந்துகொண்டு ஒருபோம்துவைத்தியம் செய்யமுடியாது. அப்படியாராவது இயற்கை வைத்தியம் செய்வார்களெனில் அது சுத்தடுப்! எழுத்தாளர்கள் எல்லாம் 'பகிரங்கமாக வைத்தியம் செய்தால் இன்னும் சில நாட்களில் ரிக்சோக்காரர்களும் 'பகிரங்கமாக' வைத்தியம் செய்யத் தொடங்கிவிடுவார்கள்! அப்படியானல் மக்களின் கதி?

என். பி. மொகமட் கரூப்—
நாவலப்பிட்டிய

கே:- மனிதத்தன்மையை எங்கே சந்திக்கலாம்?

ப:- ஏழைகளின் அன்பிலே.

R· M· துரைராஜ—பதுளை.

கே:- எனது நண்பர் படம் பார்க்கக் கூப்பிடுகிருர். என்ன செய்யலாம்?

ப:- உம்முடைய வயதையும் கூப்பிடுகிறவருடைய வயதையும் பொறுத்தது.

திருமலை ராஜ்–திரிகோணமலை

கே:- மதுவுக்கும் அரசியலுக்கும் ஒற்றுமையுண்டா?

ப:- ஒற்றுமையா? இரண்டும் தானே தேர்தல் காலங்களில் 'ஹஸ்பண்ட்' அன்ட் 'வைவ்' (கணவன் மனைவி) ஆச்சே!

என். பி. மொகமட்கரூப்—
நுவரெலியா

கே:- இரண்டு கண்கள் இரண்டு காதுகள் இருக்க ஏன் நாக்கு மட்டும் ஒன்று இருக்கிறது?

ப:- சில பெண்களின் நாக்கைப் பார்த்ததும் ஏன் தான் ஆண்டவன் இந்த ஒரு நாக்கையும் படைத்தான் எனத் தோன்றுகிறது. மற்றும் அரசியல் வாதிகள் முதல் பேசியதை மறுத்துப் பேசும் பொழுது, முதலில்பேசியது எனது மற்றைய நாக்கு என தப்பிக் கொள்ள முடியாதல்லவா?

எம். எஸ். எம். மொன்சூர்—
இரக்குவானை

கே:-'யாளி' என்றுலென்ன?

ப:- இராவணனது காலத்திலே வாழ்ந்த ஓர் மிருகம் நெற்றியில் ஒரு கொம்பிருக்கும். ஆனல் இது எப்படிப்பட்ட மிருகம் என்பதை மட்டும் இன்னுமொரு ஆராய்ச்சியாளர்களும் அறியவில்லை.


உங்கள் துணிகள்

வெண்மையாகவும்
பிரகாசமாகவும் விளங்க

**யாழ் சோப்**

உபயோகியுங்கள்.

**யாழ் சோப்**


தரத்தில் சிறந்தது.

அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு
பல மடங்கு லாபம் கிடைக்கிறது.


## ஈழத்து எழுத்தாளரிடமிருந்து சில சுவையான தகவல்கள்:

பேட்டி;- ரமணன்

# கே. டானியல்



உங்களுக்குப் பிடித்த ஈழத்து எழுத்தாளர் யார்?

திரு. க. கைலாசபதி அவர்கள்.

நீங்கள் எதற்காக எழுதுகிறீர்கள்? எழுத வேண்டும் என்பதற்காக எழுதுகிறீர்களா? அல்லது ஏதாவது சம்பவங்கள்தான் தங்களை எழுதத் தூண்டியதா?

ஓரே மூச்சில் மூன்று கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. கேள்விகள் ஓரே மையத்தைச் சுற்றிச் சுற்றி நிற்பவையாயினும் மூன்று விதமான பதிலையே கொடுக்கவேண்டியிருக்கிறது.

நாம் விரும்புகிருேமோ இல்லையோ உலகில் பல காரியங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சூரியோதயம், சூரிய அஸ்தமனம் காற்று, மழை, வெயில் இவைகள் உட்பட இன்னும் பல இந்த நியதிக்குட்பட்டவையாகும். முட்டையை வைத்துக்கோழியை அடைகாக்கச் செய்கிருேம். ஒரு நாள் கழிந்து போகும் போது முட்டைக்குள் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது. ஆனல் ஸ்தூலமான உருவத்தின் புறப்பாட்டை எம்மால் பார்க்கமுடிவதில்லை. இரண்டாம் நாள் கோழி அடைகாக்கிறது. முதலாவது நாளின் மாற்றத்தை உதாசீனம் செய்து விடாமல், அந்த மாற்றத்தையும் உள்ளடக்கிக்கொண்டே இந்த இரண்டாவது நாள் மாற்றம் ஏற்படுகிறது. முறையே நடக்கும் மாற்றங்களை உள்ளடக்கிக் கொண்டு இருபது நாட்கள் வரை ஏற்படும் மாற்றங்கள். இருபத்தோராம் நாள் ஸ்தூலமான முழு மாற்றத்தின் புறப்பாட்டை ஊர்ஜிதம் செய்துவிடுகிறது. நிகழ்ந்துவிட்ட இந்த முழு மாற்றம் முழு மனிதர்களுக்குமே பயனுள்ளதாகும். இந்த அடிப்படையில் இவ்வுலகில் ஏற்படும் மாற்றங்களைத் தடுத்து நிறுத்திவிட முயற்சித்துத் தோற்றுப்போவதைவிட, இந்த மாற்றத்தைத் துரிதப்படுத்த பக்குவ வடிவம் கொடுத்து எழுதுவதையே இலக்கியமென்று நான் கருதுகிறேன். இப்போது நான் எழுதுவதெல்லாம் இதற்காகவே.

எழுத வேண்டுமென்பதற்காக நான் எழுதியதுண்டு. அவையெல்லாம் முன்பு.

நெஞ்சைத்தொடும் பல சம்பவங்கள் என்னை எழுத வைத்ததுண்டு. ஆனல் இப்போதோவெனில் அப்படிக் கிட்டும் சம்பவங்களுக்கு எனது இலக்கியக் கருத்துக் களமைத்த வடிவங்கொடுத்து எழுதுகிறேன்.

முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றிய தங்கள் கருத்தென்ன?

உலகின் வரலாற்றுக்குட்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடுகள் பற்றி தெளிவான ஞானம் பெற்றிருப்பவர்கள்; பெறுபவர்கள்.


'தீ' நாவல்பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கிறது. படிப்பதற்கு இனிமையாக இருக்கிறது. நமது நாட்டில் இன்றுள்ள சமூக அமைப்புமுறையில்' ''இனிமை எப்படிப்பட்டது? இனிமை எப்படி இருக்க வேண்டும்?'' என்பதற்கெல்லாம் இலக்கணம் வகுத்துவிட முடியாது. அப்படி வகுத்துவிட்டால் ''பார் பார், தனி மனித சுதந்திரத்தைப் பறிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறுக்கிடுகிருர்கள்'' என்று, தீயை மனதார வெறுப்பவர்களுமே கூச்சல் போடத்தொடங்கிவிடுவார்கள்!

முற்போக்கு எழுத்தாளர்களால் நடாத்தப்பட்ட மாநாடு ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்காக, அந்த வட்டாரத்திற்குப், 'பப்ளிசிட்டி' கிடைப்பதற்காகத்தான் என்கிருர்கள். இதுபற்றி தங்கள் கருத்தென்ன?

இது வெறும் தவருன பிரசாரமாகும். மகாநாட்டின் பின்பு தான் இது புலப்பட்ட

[ 11-ம் பக்கம் பார்க்க ]




## நாய்வீட்டுக்குள் முட்டையிடும் கோழிகள்

கரோலினா என்ற இடத்தில் ஒரு பெரிய கோழிப்பண்ணை இருந்தது. இப்பண்ணையை கிரியர், பிரவுண் என்ற இருவர் கூட்டாக நடத்தி வந்தார்கள். அந்தப்பண்ணையால் அடிக்கடி நஷ்டமேற்பட்டுக் கொண்டிருந்தது. கோழிகள் எதேச்சையாகச் சென்று எங்கெல்லாமோ முட்டையிட்டதாலோ அல்லது யாரோ திருடர்கள் புகுந்து முட்டைகளைக் களவாடுவதாலோ பண்ணையைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்படும் போலிருந்தது. அதனால் தமது நாயைக் கொண்டுவந்து காவலுக்கு வைத்தார்கள்.

இப்பொழுது அவர்களுக்குப் பெருவாரியான முட்டைகள் கிடைக்கின்றன. நாய் காவல் காப்பதனால் என்று நினைக்கிறீர்களா? அதுதானில்லை. ஒவ்வொரு கோழியையும் நாய் துரத்திச் சென்று தனது வீட்டுக்குள் (நாயின் கூட்டுக்குள்) வைத்துக் கொள்கிறது. முட்டையிடாமல் கோழியை அது வெளியே செல்லவிடாதாம். நூறுபவுனுக்குமதிகமாகக் கொடுத்து இந்த நாயை வாங்கப் பலர் முயன்றனர். ஆனால் அதைவிற்க கிரியரும், பிரவுணும் மறுத்துவிட்டனர்.

## செயற்கைப் புருவங்கள்

"குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும்......" இப்படி அழகுவர்ணிக்கப் படுகிறது. முக்கியமாகப் பெண்களின் முகக் கவர்ச்சி வில்லுப் போன்ற புருவத்திலேயே தங்கியிருக்கிறது. சில பெண்கள் அழகிகளாக இருக்கும் புருவம் சதிசெய்து விடுவதனால் கவர்ச்சியற்றவர்களாகி விடுகிறார்கள். அவர்கள் முகத்தைப் பார்க்கும்போது எங்கோ ஏதோ குறைபாடு இருப்பதாகத் தோன்றும்.

அதனால் தற்காலத்துப் பெண்களில் சிலர் புருவ உரோமத்தை அப்படியே சிரைத்துவிட்டு தமது இஷ்டம்போல் நீளமானதும், வளைவானதும், அழகானதுமான புருவத்தை மையினால் தீட்டிக் கொள்ளுகிறார்கள். இவைகள் மழையில் நனையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், புருவமை கரைந்துவிட்டால் அவர்கள் வதனம் மிகக் கோரமாகிவிடும்.

மேல்நாடுகளில் இப்பொழுதெல்லாம் ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்கள். மிக கவர்ச்சியும், அழகும் நிறைந்த புருவங்களை நுணுக்கமாகத் தயாரிக்கிறார்கள். சாதாரணமாக ஒரு பெண்ணின் புருவத்தில் காணப்படும் உரோமத்திலும் பார்க்க மூன்றுமடங்கு அடர்த்தியும் மென்மையுங் கொண்ட உரோமத்தினால் இந்தச் செய்கைப் புருவம் தயாரிக்கப் படுகிறது. இந்தப்புருவங்கள் ஒவ்வொன்றும் 17 பவுனுக, அதாவது 232 ரூபாவாக இங்கு விற்கப் படுகின்றன.

பூனைக் கண்களை அல்லது மஞ்சள் கண்ணை அழகான நீலக்கண் ஆக்க வேண்டுமா? அதற்கும்வழிபிறந்துவிட்டது! கண்ணுக்குள்ளேயே அணியக் கூடிய அழகான நிறக் கண்ணாடிகள் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன: இக்கண்ணாடியின் விலை அறுபதுபவுனுக (சுமார் 820 ரூபாவாக) இருந்தபோதிலும் செல்வச் சீமாட்டிகளும், சினிமா நடிகைகளும் பல நிறங்களில் இந்தக் கண்ணாடிச் செய்கைக் கண்களைவாங்கித் தாம் அணியும் ஆடைகளின் நிறத்துக்குப் பொருத்தமாக மாறி மாறிப் போட்டுக் கொள்கிறார்கள்.

## புயல் சீறினும் மீன்பிடிக்கிறார்!

இயற்கை சதி செய்து விட்டால் மீன்பிடித் தொழிலைஜீவனமாகக் கொண்டவர்கள் அவலப் படுவார்கள்! பெருமழை புயல் தோன்றி விட்டால் படகுகளையோ கட்டுமரங்களையோ கடலில் இறக்க மாட்டார்கள்.

இயற்கையின் சீறலுக்கு அஞ்சாமல் எந்நேரத்திலும் மீன் பிடிக்கக் கூடிய புதியமுறையை திரு ஸ்டீபன் சன்னி கண்டிருக்கிறார். நோர்யோக்கைச் சேர்ந்த இவர்மீன்பிடித் தொழிலை ஜீவனமாகக் கொண்டவரல்ல. மீன்பிடிப்பது இவரது பொழுதுபோக்கு.

கடற்கரையிலிருந்துஒருபட்டத்தைப் பறக்கவிடுவார். இந்தப் பட்டம் சுமார் முக்கால் மைல் தூரம் கடல்மேலேபறந்து செல்லும். இந்தப்பட்டத்தைப் பறக்கவிடும் நூலில் முதல் நூறுயார் மிகமெல்லியதாகவிருக்கும். மிகுதி மிகக் கடினமான நைலோன் நூலாகவிருக்கும். நூலின் கடினமான பகுதியில் அளவான நிறையுள்ள ஈயத்துண்டுகள், கொளுக்கிகள், இணைக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட அளவு தூரத்துக்குக் கடல்மேலே பட்டம் சென்றதும் அதுதானாகவே அறுத்துக் கொண்டு போய்விடும். அப்படிப் பட்டம் அறுத்துக் கொண்டுபோகவில்லையானால் பட்டத்தைப் பறக்கவிடுபவர் ஒற்றி ஒற்றி இழுப்பார் அப்பொழுது மெல்லிய நூல் இணைத்துள்ள பகுதி அறுந்துபோய் விடும்.

இப்பொழுது கடினமான நைலோன் நூல் ஈயம், கொளுக்கி சகிதம் கடலில் வீழ்ந்து ஆழ்ந்து விடும். சிறிதுநேரத்துக்குப் பின் நூலை வெளியே இழுத்தெடுத்தால் கொளுக்கிகளில் ஏராளமான மீன்கள் அகப்பட்டிருக்கும்!

## அதிர்ஷ்டச் சீட்டில் மணப்பெண்!

ஸ்மொலென்ஸ்க் என்னும் இடத்தில் ஒருபுதிய முறையில் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஸ்ரீதனச் சிக்கலிலிருந்து பெண்கள் விடுபடவேண்டும் என்பதற்காக லொத்தர் முறையில் திருமணம் செய்யும் ஏற்பாட்டை இங்குள்ள முனிசிபல் கவுன்சில் செய்துள்ளது.

முதலில் திருமணப் பருவம் வாய்ந்த ஒருபெண்ணை முனிசிப்பல் கவுன்சிலில் தெரிவுசெய்து பத்து நாட்களுக்கு ஒரு தனி வீட்டில் அவளை தங்கச் செய்கிறார்கள்: அதோடு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரூபிள் பெறுமதியுள்ள ஐயாயிரம் லொத்தர் டிக்கெட்டுகளை அது விற்பனை செய்கிறது. கல்யாணம் செய்ய விரும்பும் வாலிகள் முதலில் அந்தப் பெண்ணைச் சென்று பார்வையிடுவார்கள். பெண் மனதுக்குப் பிடித்துவிட்டால் அந்த வாலிபர்கள் லொத்தர் டிக்கட்டுகளை வாங்குவார்கள்.

ஐயாயிரம் டிக்கட்டுகளும் விற்பனையானபின் சீட்டிழுப்பு நடைபெறும், அதிர்ஷ்டச் சீட்டைப் பெறுபவன் அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்வான். டிக்கெட் விற்றதனால் சேர்ந்தபணம் ஐயாயிரம் ரூபாவையும் நகரசபை, தம்பதிகளுக்கே கொடுத்துவிடுகிறது.

சிலசமயங்களில் அதிர்ஷ்டச் சீட்டைப் பெற்றவாலிபனைப் பெண்ணுக்குப் பிடிக்காமற் போய் விடுவதுமுண்டு. அச்சந்தர்ப்பத்தில் மேற்படி பணத்தை இரண்டாகப்பிரித்து அந்தவாலிபனுக்கும், பெண்ணுக்கும் கொடுப்பார்கள்.

## மாடுகள் சென்ற மர்மம்!

மெக்ஸிக்கோவிலிருந்து எல்லைப்புறத்தைத் தாண்டி ஐக்கிய அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாகச் சென்று வேலை செய்யும் மெக்சிக்கோவர்களைக் கண்டுபிடிக்க எல்லைப்புறக் காவல் அதிகாரிகள் நீண்டகாலமாக மண்டையைப் போட்டு உடைத்தார்கள். ஆனாலும் அவர்கள் முயற்சி பலனளிக்கவில்லை.

பெருவாரியான மெக்ஸிக்கோவர்கள் ஐக்கிய அமெரிக்காவுக்குள் புகுந்து விட்டார்கள் என்ற செய்தி வந்து கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் அப்படி நழுவிச் சென்றதற்கான அறிகுறிகள் ஒன்றையுமே காணவில்லை.

பெருவாரியான மாடுகள் எல்லைப்புறத்தை கடந்துசென்றதற்கான குளம்படிகள்தென்பட்டன, ஆனால் அப்படி மாடுகள் சென்றதாகவும் தெரியவில்லையே என்று ஒருகாவல் அதிகாரி சிந்தித்தார், அன்றிலிருந்து அவர்மூளை தீவிரமாக வேலை செய்தது. இராப்பகல் கண்விழித்து ஜாகராகக் காவல் காத்தார். இரவுநேரம்; தவழ்ந்தபடியேசிலர் எல்லைப்புறத்தைத் தாண்டுவது தென்பட்டது, அவர்களைக்கைதுசெய்து பார்த்த பொழுது அவர்கள் கால்களிலும் கைகளிலும் மாட்டுக் குளம்புகளை இணைத்துக் கொண்டிருந்தார்கள், அடிக்கடி எல்லைப் பிரதேசத்தில் குளம்படிகள் தென்படும் மர்மம் இப்பொழுது அம்பலமாகிவிட்டது!

## அபாய அறிவித்தல்

ராயல் கல்ஸ்ஸிப் என்றொரு செடியிருக்கிறது. இது உலகத்தில் ஓரே ஒரு இடத்தில் பட்டும்தான் விளைகிறது. ஜபாவிலுள்ள பங்கரங்கெ என்ற எரிமலை உயரம் பத்தாயிரம் அடி. அச் செடி இவ்வெரிமலையின் உச்சியில்தான் விளைகிறது. அங்கே உள்ள மக்கள் இதன் விளைவு அழிவுக்கு அறிகுறியாக இருக்கிறது என்று கருதுகிறார்கள். அச்செடி எப்போது தோன்றுகிறதோ அப்போது எரிமலை கட்டாயமாகக் குமுறுமாம். ஜாபா மக்கள் இதை மிகவும் கவனமாகத் தேடுகிறார்கள். இவர்கள் இதைத் தேடுவதன் காரணம் இது தோன்றியவுடன் பத்திரமான இடத்திற்கு ஓடிப்போய் மறைந்து கொள்வதற்குத்தான்.

## ஏழைப்பெண் ராணியானாள்!

'டைஷ டோனி கார்டனர்' என்பவள் ஏழைப் பெண் ஏழையானாலும் அழகி. இங்கிலாந்திலுள்ள செல்மான் டூஸ்டனில் பிறந்தவள். முதலில் ஒரு ஹோட்லிக் தட்டுக்கழுவும் வேலைசெய்தாளாம்! பிறகு உணவுவிடுதியில் நாட்டியமாடிப் பிழைத்தாள், அதன்பின்னுல்ஜோர்டானுக்குசென்று அங்குள்ள ஒருசினிமாக் கம்பெனியில் 'டைபிஸ்ட்' ஆக வேலை ஏற்றாள். அங்கு நடந்த ஒரு விருந்தின்போது அவளுக்கு அடித்தது யோகம்! அந்த விருந்துக்கு வந்திருந்தமன்னர் ஹூசேன் இந்த அழகியைக் கண்டார், பழகினார், காதலே கொண்டுவிட்டார்! பிறகென்ன, அந்த ஏழைப்பெண் அரியாசனத்தில் ஏறிவிட்டாள்!


"ஆ...ஐயோ,
தலைவலி!.. தலைவலி!...
இதைப்போக்கமருந்தே இல்லையா?"
"யார் சொன்னது?
இதோ இருக்கிறதே,
ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்"




விலை ரூபா 3-00 (தபாற் செலவு சதம் 95)

வேறு நோய்களையும் இது குணமாக்குகிறது. அவற்றின் விபரமறிய இனமாக அனுப்பப்படும் 52 பக்கங்கள் உள்ள கேட்லாக்கைப் பாருங்கள்.

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.

# உங்கள் காலபலன்

## இந்தவாரம் எபப்டி?

"ரவி" சோதிடர்

27-5-62 முதல் 2-6-62 வரை

மேடம்: இளைய சகோதரரால் இந்த வாரத்தில் நன்மையுண்டு. தொழிலிலும் முன்னேற்றமும் லாபங்களும் காணப்படுகின்றன. தேகசுகம் மட்டும் சிறிது பாதிக்கப்படும்.

இடபம்: பிதாவுக்குச் சுகவீனமும், பிதாவழி பந்துக்களுடன் விரோதங்களும் ஏற்படும். தொழிலில் முன்னேற்றமுண்டு, வார இறுதியில் உங்கள் தேகசுகம் பாதிக்கப்படும்.

மிதுனம்: தொழிலில் இவ்வாரத்தில் சிறந்த முன்னேற்றங் காணப் படுகிறது. எவ்விதஎதிர்ப்புக்களையும் சமாளித்து முன்னேற முடியும். பூமி லாபமும் உண்டு. ஆனல் ஆறுதலிருக்காது.

கடகம்; குடும்ப விஷயங்களில் சில சிக்கல்கள் ஏற்படும். ஆனல் தொழிலில் சமலாபமுண்டு. பூமியாலும் நன்மையுண்டு. வாரத்தின் முதல் நாளில் சில சங்கடங்கள் ஏற்படும்.

சிங்கம். சத்துரு ஜயமுண்டு. தொழிலில் தொடர்ந்து முன்னேற்றமேற்படும். ஆனல் பிதாவுக்குச் சுகவீனமுண்டாகும். திங்கள், செவ்வாய், புதன் காலையை அவதானமாகக் கழிக்கவும்.

கன்னி: தேகசுகம் இன்னும் சிறிது காலத்துக்குப் பாதிக்கப்படும். குடும்பச் சச்சரவுகளும் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். வீண் அபவாதங்களுக்கு மிடமுண்டு. புதன், வியாளன், வெள்ளி காலையை அவதானமாகக் கழிக்கவும்.

துலாம்: தொழிலில் முன்னேற்றங் காணப்படுகிறது. பொருள் விருத்தியுமுண்டு, ஆனல் குடும்பத்தில் மட்டும் சச்சரவுகள் ஏற்படும். உங்கள் தேகசுகமும் பாதிக்கப்படும். வெள்ளி பிற்பகலையும், சனிக்கிழமையையும் அவதானமாகக் கழிக்கவும்.

விருச்சிகம்: உங்கள் சங்கடங்களில் சிலநீங்கும். குடும்பச் சூழ்நிலையும் சிறிது சுமுகமாக அமையும், எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற முடியும்?

தனுசு: தேகசுகம் பாதிக்கப்படும். பித்தமயக்கம், வயிற்றில் ரோகம் என்பன ஏற்படும், குடும்பச் சச்சரவுகளும் ஏற்படும். ஆனல் எதிர்ப்புக்களைச் சமாளிப்பது சுலபமாக இருக்கும்.

மகரம்: மனதில் அமைதி நிலவாது. குடும்ப சுகமும் குறைவாகவே காணப்படுகிறது. ஆனல் தொழிலில் முன்னேற்றமுண்டு. முன் முதலீடுசெய்தவற்ருல் லாபம் கிட்டும்.

கும்பம்: பூமிப் பிரயோசன பலனுண்டு. சகோதரராலும் நன்மை ஏற்படும். எதிர்ப்புகள் குறையும் ஆனல் பிரயாசம் மட்டும் அதிகமாகவே காணப் படுகிறது,

மீனம்: தேகசுகக் திருந்தும், தொழிலிலும் முன்னேற்றங் காணப்படுகிறது. மாதாவழி பந்துக்களால் நன்மையுண்டு. பொருள் லாபமும் கிட்டும்.


**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்தஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ, 5-00போஸ்டல் ஓடர்அனுப்பினல் உங்கள் ஒருவருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.



**உங்கள் கவலை என்ன?**

- கடன் தொல்லையா? கஷ்ட நிலையா?
- காதலில் வெற்றி பெற வேண்டுமா?
- இல்லற வாழ்வில் இன்பம் தேவையா?
- கணவன்-மனைவிக்கிடையே மனக்கசப்பா?
- வழக்குக் கஷ்டங்களா? பரீட்சையில் துன்பமா?
- தொழில் உயர்வா? பிணிகளினல் துன்பமா?
- மங்கையருக்கு ஏற்படும் மாதவிடாய் நோயா?

விஷயங்கள் பரமரகசியமாக வைக்கப்படும்

கவர்மென்ட் றெஜிஸ்டர் மந்திராச்சாரியார்

**பி. எம். திசநாயகா**

(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)
அருத எண்ணெய் அலுவலகம்,
கம்பளை.


# என்னசேதி?

### முஸ்லீம் எழுத்தாளர் கூட்டம்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் சென்ற வாரம் முஸ்லீம் எழுத்தாளர் கூட்டம் நடைபெற்றது.

வித்தியாதரிசி ஜனப் அ. மு. சரீபுதீன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கிழக்கிலங்கையிலுள்ள முஸ்லீம் எழுத்தாளர்கள்மட்டுமல்லாது இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற முஸ்லீம் எழுத்தாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

※ ※

### இசைவிழா

இலங்கை இசைத்தமிழ் நிலையத்தின் பதினைந்தாவது வருடாந்தவிழா ஜூன் 13, 14, 15, 16, 17ம் திகதிகளில் நடைபெற விருக்கிறது.

இந்தவிழாவை மருதனுமடம் சன சமூக நிலையத்தில் சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளைக் கலைப்புலவர் சண்முகரத்தினம் செய்துவருகிருர்.

※ ※

### யாழ்- மேயர் தெரிவுக் கூட்டம்

யாழ்-மாநகர சபைக்கு ஒரு புதியமேயர் தெரிவுசெய்வதற்காக வருகிற 28ம் திகதி ஒரு விசேஷ கூட்டத்தைக் கூடும்படி யாழ்-முனிசிபல் கமிஷனர் உத்தர விட்டிருக்கிருர்.

※ ※

### சிறையில் வெசாக்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வெசாக் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தவிழாவில் அனேக இந்துக்களும் கலந்துகொண்டனர்.

சிறைச்சாலை வாசலில் புத்தரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஓவியங்கள் அடங்கிய பந்தல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

※ ※

### தொழிலாளர் கலைவிழா

மாத்தளை மாவட்டத்தில் தொழிலாளருக்கான கலைவிழா ஒன்று நடத்துவதென இ.தொ. கா. மாத்தளை மாவட்டக் கமிட்டி கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

※ ※

### வண்டிச்சவாரி

யாழ் – சனசமூக நிலையங்களின் சமாஜம் நடாத்த மாட்டுவண்டிச்சவாரி யாழ்-பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது, 33 சோடி மாடுகள் கலந்து கொண்ட இந்தச் சவாரிப் போட்டயில் திரு. சின்னத்துரை என்பவர் முதல் இடம் பெற்ருர்.

# இத்தால்... சகலரும் அறிவது!

### விமர்சன 'அழ'கோ?

சென்ற வாரம் வெளிவந்த புதினத்தில் ''சரியா, தப்பா? என்ற நாடகத்துக்கு 'அழகு' என்பவரால் அழகாக எழுதப்பட்டிருந்த விமர்சனத்தைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. நடக்கக்கூடாத காரியத்தை எழுதிவிட்டால் அதை முற்போக்கு என்று ஆசிரியர் எண்ணி, பெண்மைக்கே இழுக்கு தேடித் தந்துவிட்டார்! என்று கதாசிரியர்மேல் வசைமாரி பொழிந்திருக்கிருர் விமர்சகர். என்னைப் பொறுத்தவரையில் முற்போக்கு என்று எதையுமே கணிக்கவில்லை.

பெண்மைக்கு இழுக்கு ஏற்பட்டு விட்டதென்று அவர் துணிந்து வலியுறுத்தியிருக்கிருர். ஆனல் அக்கதையின்படி பெண்மை எங்கே பறிபோயிற்று என்பது எனக்கு விளங்காத புதிராக இருக்கிறது.

இருவர் காதலித்தனர். தமிழரின் பண்பாட்டின் படி அவர்கள் கந்தர்வ மணம் புரிந்திருக்கலாம். அதனல் அவள் கர்ப்பவதியானுள். தந்தை மறுக்கிருர். நண்பன் உதவி செய்கிருன். தானே அவளை மணந்து தன்நண்பனுக்குத் தானமளிக்கிருன். கட்டிய மனைவியை மற்றவனுக்குக் கொடுத்ததினல் பெண்மைக்கு இழுக்கு வந்து விட்டதென்று குற்றம் சாட்டும் விமர்சகரிடம் நான் ஒருகேள்வி கேட்க ஆசைப்படுகிறேன்! இரண்டு மாதக் கர்ப்பிணியை ஒருவன் கட்டி வாழ்க்கை நடத்தினல் அத்தப் பெண்ணை என்ன சொல்லி அழைப்பீர்? அவளைப் பதிவிரதை என்று அழைப்பீரா?

இரண்டாவதாக 'கதை பலவீனமானது. ஆனல் நடிகர்கள் தங்கள் நடிப்பால் அந்தக் குறையைப் போக்கி விட்டார்கள்' என்று எழுதியிருக்கிருர் 'அழகு'

''பற்குணத்தின் நடிப்பு நன்ருக இருந்தது. புதுமைக் கருத்துகளை நாசுக்காக, பொருத்தமான இடங்களில் பேசி அற்புதமாக நடித்தார்'' என்று இருக்கிறது. அந்தப் புதுமைக் கருத்துக்களை நாசுக்காகப் பேச வைத்து, பொருத்தமான இடங்களிலே அமைத்தவன் யார் என்று அவர் சிந்தித்துப் பார்த்தாரா?

கொழும்பு—7 சி. சண்முகம்

### என் கருத்து இப்படி!

எதிரியின் மொழியிலேயே வாக்குமூலத்தை ஏன் பதியவில்லை என்று நீதிபதி கேட்டார். அதில் தப்புஇல்லை. ஆனல் அதேகேள்வியை அரசாங்கத்திடம் கேட்க ஆளில்லையே என்கிறது 'புதினம். அரசாங்கத்திடம் கேட்கும்படியாக அப்படி என்னதப்புஅது செய்துவிட்டது? அரசாங்கபாஷை ஆங்கிலமாக இருந்தபோது அவரவர் பேசும் மொழியில்தான் தொடர்புகள் வைக்கப் பட்டனவா? வழக்குகள் விசாரிக்கப் பட்டனவா?

ஆட்சியாளர் பாஷை அரபு என்ருல் அம்மொழியில் மக்களோடு உறவு கொள்வது அரபுத் திணிப்பு அல்ல. பிறமொழி பேசுபவர்களோடு அவரவர் மொழியில் தொடர்பு கொள்ள முடியுமா? அரசாங்க பாஷை என்ருல் அதுதான் மக்கள்பாஷை என்பது என் கருத்து: அரசாங்கம் தனது பாஷையில் தான் மக்களுடன் தொடர்புகொள்ள வேண்டும். இதில் தப்புஎன்ன இருக்கிறது?

வெலிகாமம், — எம். பி. எம். ஹிலுர்.

### மட்டக்களப்பார் மட்டமா?

கொழும்பில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சமீபத்தில்கூடிய அகிலஇலங்கையிலுமுள்ள தமிழ்எழுத்தாளர்கள் மகாநாட்டில் இடம்பெற்ற சில கொந்தளிப்பான சம்பவங்களுக்குப் பின்னர். யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் அகில இலங்கை தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துக்கு—மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, வாழைச்சேனை, சம்மாந்துறை பகுதிகளிலுள்ள 'மட்டக்களப்பு எழுத்தாளர்கள்' மத்தியில் கணிசமான 'போதியஅபிப்பிராய ஆதரவு' வளர்ந்து வருகிறது!

மட்டக்களப்பு, — செழியன் பேரின்பநாயகம்.

# கே. டானியல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயின், மகாநாட்டிற்கு முன்பே மகாநாட்டைக் குழப்ப வென்று கோஷ்டி சேர்ந்திருக்கவேண்டியதில்லையே! மகாநாட்டிற்கு முன்பே இது புலப்பட்டதாயின், மகாநாட்டிற்கு பெரும்பான்மையினர் கலந்திருக்கமாட்டார்களே! இந்த விஷமப் பிரசாரத்தில் இறங்கி இருப்பவர்கள் தற்போதைக்குத் தங்கள்நினைவுகளை நிறைவேற்றிக் கொண்டாலும், இறுதியில் தோல்வியே காண்பார்கள். மாற்றத்தை நோக்கிச் சுழலும் விசைக்கருவியை தொட்டுநிறுத்திவிட முயற்சிக்கலாம். ஆனல் பின்பக்கமாக விசையைச் சுழற்ற முயன்ருலோ விசைக்கருவி கண்ணுக்குத்தெரியாத தொலைவுக்கு இவர்களைத் தூக்கி வீசிவிடவும் கூடும்.

**தரங்கள் எழுத்துலகில், தங்களது குருவாக யாரைக் கருதுகிறீகள்?**

குரு, சிஷ்யன் என்ற நிலைக்கு மனிதனை உட்படுத்தி தனி மனித வழிபாட்டுமுறையைவளரவிடுவதுபொதுவான சமூக வளர்ச்சிக்கே குந்தகமானது என்பது என் கருத்தாகும். அப்போதைக்கப்போது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எனக்களித்தவர்கள்பலர், திருவாளர் எஸ். பொன்னுத்துரை, என். கே, இரகுநாதன் ஆகிய இருவரும் இவ்வரிசையில் முன் நிற்பவர்கள். இவர்களால் நான் மிகவும் பலன் அடைந்திருக்கிறேன்; ருசிய எழுத்தாளன் மாக்ஸிம் கார்க்கியையும் என் நினைவுக்கூடாக இவ்வரிசையில் நான் சேர்த்துக்கொள்கிறேன்.

**எழுத்துலக வாழ்க்கையிலே தங்களால் மறக்கமுடியாத சம்பவமென்ன?**

எழுத்தாளனென்ற கர்வத்தில் வேலை வெட்டியின்றித் துள்ளித்திரிந்த வேளைகளில் ஒருநாள்.........

காலை பத்து மணி. வீட்டில் எழுதிக்கொண்டிருந்தேன். என் மகன் 'புரட்சி' பாடசாலையிலிருந்து தூங்கிய மூஞ்சியுடன் வந்து கொண்டிருந்தான். பாடசாலைக்கு டிமிக்கி கொடுத்துவிட்டுவந்துவிட்டான் என்று நினைத்து அவனை அடித்தேன். முடிவில் "பசிலிட்டி பீஸ் குடுக்காததுக்கு அடிச்சுக் கலைச்சுப்போட்டினம்' ..... மகன் கூறினுன்; அவன் அழுதான், நான் அழுதேன், என் மனைவி அழுதாள்.........

**இலக்கியம் வளர தாங்கள் கூறும் யோசனைகள் என்ன?**

இலக்கியம் செய்வோருக்கிடையேயுள்ள கருத்து முரண்பாடுகளைச் சினேக பூர்வமான பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பது. முரண்பாடுகளுக்குத் தீர்வு காண முடியாத பட்சத்தில், கருத்து ஒற்றுமை உள்ள விஷயங்களில் மட்டும் மனத் தூய்மையுடன் ஒன்றுபட்டு உழைப்பது, முரண்பாடுகளை விரிவு படுத்துவதற்குப் பதில் சுருக்கிக் கொள்ள முயற்சிப்பது.

**இதுவரை பல சிறுகதைகள் எழுதிவிட்டீர்களே! சிறுகதைத்தொகுதி போடுவதாக தங்களுக்கு நோக்கமில்லையா?**

நானுக அப்படி ஒன்றைச் செய்யக்கூடிய நிலையில் இப்போது நான் இல்லை.

**நீங்கள் தற்பொழுது பல இளம் எழுத்தாளர்களை உருவாக்குவதாக கேள்விப்பட்டேன், உண்மைதானு?**

சுலபமாகவே சிலர் மிகவும் திறம்பட எழுதுகிருர்கள். சிலருக்கு எழுதவேண்டுமென்ற ஆர்வம் மேலிட்டு நிற்கிறது. சிலர் நிதர்சனமான சம்பவங்களை அருமையான சிறு கதை உத்தியுடன் சொல்லும் திறமை பெற்றிருக்கிருர்கள், சிலர் மிகவும் அடக்கமாகவும், ஆழமாகவும் சமூகத்தைப் பார்க்கிருர்கள். என்னல் முடிந்தவரை இவர்களை எழுத வைக்க முயற்சிக்கிறேன். அவ்வளவுதான். இளம் எழுத்தாளர்களை வளர்த்தெடுக்க உலகம் தரும் படிப்பினைகளைவிட, அவர்களுக்கு நான் எதை விசேஷமாகத் தரமுடியும்?

## 'பூதந்தேவனுர்' அரங்கு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தார். முடிவுரையாக அவர் உடனே எழுதி வாசித்த கவிதைகள் சபையோரைச் சிந்திக்க வைத்து விட்டன. ஏன் ஈழத்தமிழர்களும் சிந்திக்கவேண்டிய விஷயம் அது. இதோ அவர் வாசித்த கவிதைகளைப் பாருங்கள். பிறகு சிந்தனையை அவ்விடத்தில் திருப்புங்கள்.

வீட்டிலெலாம் அவனுரைகள்
விளங்க வேண்டும்;
வீதியெலாம் அவனுருவம்
துலங்க வேண்டும்;
நாட்டிலெலாம்அவன்நெறியே
நடக்க வேண்டும்;
நம் வாழ்வு குறள் வழியே
கிடக்க வேண்டும்!
ஏட்டிலெலாம் குறள் நெறிகள்
குவிய வேண்டும்;
எத்திசையும் வள்ளுவர்க்கே
கவிய வேண்டும்;
மேட்டிலெலாம் காட்டிலெ
[லாம்
வள்ளுவன் தன்
மேலான சிலை செதுக்கி
நாட்ட வேண்டும்!

நல்ல தமிழ் வளர்த்த
நம்முடைய நாவலர்க்குச்
செல்லும் வகையாலோர்
சிலையெடுப்பா ரிங்கிலையா?
அல்ல லுருது தமிழ்
ஆண்ட பெருமானுக்கு
ஒல்லும் வகையாலோர்
உருவமைப்போம் வாருங்கள்!

செய்ய விபுலானந்தன்
செய்த பெருஞ் சேவைக்கிங்கு
ஐயா நீர் சிலையெடுத்தால்
அழிந்தா விடுவீர்கள்?
மெய்யாய்த் தமிழ் வளர்த்த
மேலானேர் சிலை செதுக்கி
வையாது போனல் நாம்
வாழ்ந்தென்ன? என் வணக்கம்.

## துண்டு துணுக்குகள்

எந்த மகாநாட்டிலுமே காலை நிகழ்ச்சிகளுக்கு மக்கள் வருவது குறைவுதான். ஆனல் வேலணை மகாநாட்டில் இக்குறை இல்லாமல் போதியளவு மக்கள் வந்திருந்தமை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய தே. தமிழ் நாட்டிலிருந்து சொற்பொழிவாளர்களுக்கு போதியளவு நேரம் கொடுத்துப் பேச வைத்தால்தான் வெளியூரில் இருந்துவரும் இரசிகர்களுக்குத் திருப்தி ஏற்படும். ஊர்வலம் அதிகதூரமாய் இராமல் குறைந்து தமிழ்வேத பாராயணத்தோடு நடத்தவேண்டும். அல்லது ஊர்வலம் புனிதமாய் இராது. காலைதொடக்கம் மாலை—இரவு வரை இருக்கும் மகாஜனங்களுக்கு நன்றி. மாத்திரம் போதாது, சுத்தமான நல்ல தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். நிகழ்ச்சி நிரல் விளம்பரத்தோடு அடித்துக் கொடுத்தமை மெச்சத் தக்கது. ஆனல் விழா நிகழ்ச்சி நிரல் விளம்பரம் கூட நோக்கத்துக்கு மாருக இருக்கக் கூடாது ஆமாம், வள்ளுவர் விழா நிகழ்ச்சி நிரலின் கடைசிப்பக்க விளம்பரம்..... ?

# திரை மறைவில்

[இரண்டாம்பக்கத் தொடர்ச்சி]

'தனக்குத் தெரியாத தமிழ் தன் பிடரிக்குச் சேதம் என்பது அவருக்குத் தெரியும். பாவம், அவருக்கு இஷ்டமில்லாத போதும் அரசாங்கம் அவரை இங்கே திணித்து விட்டிருக்கிறது போல் தெரிகிறது!

ஊர் ஊராகப் போய் கிராமப் புறங்களிலுள்ள மக்களோடு சலந்துறவாடிப் பேச வேண்டிய அந்த உத்தியோகத்தர், இப்போது உள்ளூராட்சி அலுவலகத்துக்குள் இருந்தே கருமமாற்றுகிருராம்!

### புதிய எழுத்தாளர் சங்கம்!

முற்போற்கு எழுத்தாளர் சங்க மாநாட்டுக்குப் பிறகு ஈழத்து எழுத்தாளர்களிடையே ஒரு புதிய விளிப்பு ஏற்பட்டிருச்கிறது! அகில இலங்கைச்கும் உரித்துடைய ஓரே ஒரு எழுத்தாளர் சங்கம் என்ற முறையில், சில சலுகைகளை—உரிமைகளை அவர்கள் தட்டிக்கொண்டுபோய் விடக் கூடுமென்ற உண்மை மாநாட்டின் பிறகுதான் மற்ற' எழுத்தாளர்களுச்கு விளக்கமாயிருச்கிறது. அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவிருச்கும் யாழ் தமிழ் எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் அகில இலங்கைக்கும்—எல்லாவகையான எழுத்தாளர்களுச்கும் பொதுவான ஒரு எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவிப்பதற்கு வேண்டிய பூர்வாங்க ஏற்பாடு நிச்சயமாகச் செய்யப்படுமென்று தெரிகிறது. இத்தகைய ஒரு புதிய சங்கத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற கருத்துச்கு பட்டச்சளப்பு எழுத்தாளரிடையேயும் மிகுந்த ஆதரவு கிடைக்கிறதாம்!

கவர்ச்சிகரமான
புளொக்குகள்
செய்வதற்கு சிறந்த இடம்
Sri Lanka Block Makers
131, Messenger, Street, COLOMBO.

ஸ்ரீமான் சித்தம்பலம் (9)

படிக்கவா? படுக்கவா?



### நீங்களும் எழுதுங்கள்!

சிரித்துப்பாருங்கள் பகுதிக்கு வாசகர்களாகிய நீக்களும் இனிமேல் விகடத்துணுக்குகள் அனுப்பி வைக்கலாம். சிறந்த துணுக்குகள் அனுப்புபவர் பெயருடன் வெளியிடப்படும். அஞ்சலட்டையில் எழுவது நல்லது. "சிரித்துப்பாருங்கள்" புதினம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

'புதினம்'
அடுத்தஇதழில்
தாழையடி
சபாரத்தினம்
எழுதும்
தாய்
சிறு கதை

தங்க ஆபரணங்களை மங்கையர்கள் தங்கள் அங்கங்களில் அணியும்போது தங்க ஆபரணங்களுக்கே ஒரு தனி அழகுதான்!

யாழ்ப்பாணம் 137, கஸ்தூரியார் வீதி

பீ. வி. எஸ். நாதன் அன் பிறதர்

நகை மாளிகையில் உருவான

ஆபரணங்களை மங்கையர் அணிந்தால்
ஆபரணங்களோடு அணிந்த மங்கையருக்கும்
ஒரு பேரழகே!

எ—ர்: தமிழ் செல்வன் (உ. இராமசாமி)

யாழ்ப்பாணத்தில்

# டெலிபோனில் காடையர் தொல்லை!

## பெண்களைப் பயமுறுத்துவது விளையாட்டா?

சமீப காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ளகாலிகளிடையே ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் வர்த்தக ஸ்தாபனங்களிலும் வேறு காரியாலயங்களிலும் கடமையாற்றிவிட்டு வீடுதிரும்பும் பெண்பிள்ளைகளைக் கேலிசெய்தும் சினிமாப்பாட்டுக்களைப் பாடியும் காடைத்தனம் புரிந்து வந்தார்கள். இவர்களைப்பற்றி பொலீசில் பெண்ணைப் பெற்றவர்கள் நிறையப் புகார் செய்தார்கள்,

இந்தக் காலாடிகள் இப்பொழுது ரெலிபோன் உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்களாம். 'காலாடிகள்' என்றதும் தலையிலே லேஞ்சி, அரையிலே சாரம், முறுக்கிவிட்ட மீசை என்று கற்பனை செய்யாதீர்கள். இவர்கள் காற்சட்டை அணிந்த காலாடிகள். பஸ்களிலும் ரெயில்களிலும் கண்ணியமான வாலிபர்கள் போல் உடை உடுத்திக்கொண்டு வந்து உட்கார்ந்துகொள்வதோடு அதே பஸ்களிலும் ரெயில்களிலும். பிரயாணம் செய்யும் உத்தியோகம் பார்க்கும் பெண்பிகளின் பெயர் விலாசத்தை எப்படியோ தெரிந்துகொண்டு விடுகிறார்கள். அதன் பின் அந்தப் பெண்கள் கடமையாற்றும் காரியாலயங்களுக்கு போன் செய்து தொல்லை கொடுக்கிறார்களாம்.

ரெலிபோன் என்றதும் யாரோ எவரோ என்று எண்ணி அவர்கள் பேச ஆரம்பித்ததும், இந்தக் காற்சட்டைக் காடையர்கள் அரை குறை ஆங்கிலத்தில் காலித்தனமாகப் பேச ஆரம்பிக்கிறார்களாம்

## பொலீஸின் கவனம்!

ஒரு காரியாலய அதிபர் சமீபத்தில் இது. போன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்தாகப் பொலிஸில் சென்று புகார் செய்ததாகவும், விஷயம் இரகசிய இலாக்காவுக்கு நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் 'புதினத்'துக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

மற்றொரு காரியாலயத்திலும் இது போன்று ஒரு காலாடி ஒரு இளம் பெண்ணுக்கு ரெலிபோன் செய்து "உன்னை கொலை செய்வேன்" என்று பயமுறுத்தினானும்!

வேறு சில இடங்களிலும் இத்தகைய காடைத்தனம் நடைபெற்றதுண்டென்றும், ஆனால், மானம் மரியாதைக்குக் கட்டுப்பட்ட அந்தப் பெண்கள், விஷயத்தைத் தங்களுக்குள்ளாகவே அமுக்கிக் கொண்டு இருந்து விட்டதாகவும் தெரியவருகிறது.

எது எப்படியாயினும் கண்ணியவான்கள் போல் காட்சியளிக்கும் காற்சட்டையணிந்த காவாலிக்கும்பல் பெருகிக்கொண்டு வருதலைத் தடுத்து நிறுத்தப் பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும், அப்பொழுதுதான் கைத்தொழில் நிலையங்களிலும் வேறு காரியாலயங்களிலும் வேலை செய்யும் நூற்றுக்கணக்கான பெண்கள் நிர்ப்பயமாக நடமாடவழி பிறக்கும்,

இலங்கை எங்கிலும் இணையற்று விளங்கும்

ஒரே ஒரு பீடி

ராஜ பீடி ஸ்பெஷல்

இன்றே இப்பொழுதே

ராஜ பீடி ஸ்பெஷல்

உபயோகியுங்கள்

ராஜபீடி கம்பெனி

கொழும்பு.

போன்: 2739

'மில்க்வைற் நீல சோப்'
ஒன்றே
உங்கள் சலவை வேலையைபூர்த்தி செய்கிற- து




இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி; அச்சகம்,